மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 26 வெள்ளிக்கிழமை (09.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 134

## யாழ். மாவட்டத்தில் அதிகாலை நிலைவரம்

# 5 ஆசனங்கள் பெற்று தமிழரசுக் கட்சி முன்னணி!

## ஆளும் கட்சிக்கு 03; ஐ.தே.கட்சி ஓர் ஆசனம்

யாழ்ப்பாணம், ஏப். 09

நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) முன்னணியில் உள்ளதாக இன்று அதிகாலை கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நேற்று மாலை ஆரம்பமான வாக்கு எண்ணும் பணிகள் இன்று அதிகாலை வரை தொடர்ந்தது.

பிந்திய தகவலின்படி - தமிழரசுக் கட்சி போனஸ் உட்பட ஐந்து ஆசனங்களையும் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மூன்று ஆசனங்களையும் ஐ.தே. கட்சி ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன என தேர்தல் அலுவலக வட்டாரங்களில் இருந்து அறியமுடிந்தது.

உத்தியோகபூர்வ முடிவுகள் இன்று காலையே வெளியாகும் எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட மூன்று ஈ.பி.டி.பி. யினரே நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்புகள் காணப்பட்டன என்றும் அதிகாலைத் தகவல்கள் தெரிவித்தன.

# யாழ்., வன்னி, மட்டு. மாவட்டங்களில் தமிழ்க் கூட்டமைப்பு முன்னிலையில்!

## திருமலை, அம்பாறையில் ஒவ்வொரு ஆசனம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 09

நேற்று நடைபெற்ற ஏழாவது பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கின் மூன்று மாவட்டங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி) முன்னிலை வகித்தது. இதேவேளை நேற்று நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் கிடைத்த தேர்தல் முடிவுகளின் பிரகாரம் திருகோணமலை, அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டங்களில் தமிழரசுக் கட்சிக்கு ஒவ்வொரு ஆசனம் கிடைப்பது நிச்சயம் என்று எதிர்வு கூறப்பட்டது.

மேலும் திருகோணமலையில் தமிழரசுக் கட்சிக்கு இரண்டு ஆசனங்கள் கிடைக்கும் சாத்தியம் உண்டு என்று அங்கிருந்து கிடைத்த பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்ட தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

மட்டக்களப்பு, ஏப். 9

மட்டக்களப்பு மாவட்ட தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் நள்ளிரவு வெளியாகின.

தமிழரசுக் கட்சி-2576, ஐ.ம.சு. கூட்டமைப்பு-2254, ஐ.தே.முன்னணி-671, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி- 318

| | ஐ.ம.சு.க | ஐ.தே.க | ஐ.தே.மு |
|---|---|---|---|
| இரத்தினபுரி | 11,315 | 3,010 | 696 |
| மாத்தறை | 10,560 | 3,041 | 1,439 |
| மாத்தளை | 9,893 | 2,854 | 755 |

## 55 சதவீதமான மக்களே வாக்களிப்பு ஜனாதிபதித் தேர்தலைவிடக் குறைவு

கொழும்பு, ஏப். 09

இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றத்துக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நேற்று இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 52 முதல் 55 வீதமான மக்கள் வாக்களித்துள்ளதாகத் தேர்தல் செயலகமும் கண்காணிப்பாளர்களும் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலையில் மிகவும் மந்தமான நிலையில் ஆரம்பித்த வாக்களிப்பு மதியத்துக்கு பின்னர் சூடு பிடிக்க ஆரம்பித்தது.

காலையில் நாட்டின் பல பகுதிகளில் மிகக் குறைந்தளவு மக்களே வாக்களித்திருந்தனர்.

இதன் காரணமாக மிகக் குறைந்தளவு மக்களே வாக்களிக்க கூடும் என்ற அச்ச நிலை

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாவது நாடாளுமன்றத் பொதுத் தேர்தல்

## ஆளும்கட்சிக்கு வெற்றிவாய்ப்பு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிட்டாது

கொழும்பு, ஏப். 9

ஏழாவது நாடாளுமன்றத்துக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெரும்பான்மை பலத்தைப் பெறும் என்று நேற்று நள்ளிரவு வெளியான தகவல்கள் மூலம் தெரியவந்தது.

வாக்குகள் எண்ணப்படும் செயலகங்களில் இருந்து செய்தியாளர்கள் தரும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.தேர்தல் மாவட்டத்தில் வாக்களிப்பு 18.16 வீதம் மட்டுமே!

### திருமலையில் 65% ; அம்பாறையில் 60%

யாழ்ப்பாணம், ஏப். 09

வடக்கு, கிழக்கில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களில் யாழ். தேர்தல் மாவட்டத்திலேயே ஆகக்குறைந்த வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.

யாழ். தேர்தல் மாவட்ட ரீதியில் வாக்களிக்க 7 லட்சத்து 21 ஆயிரத்து 359 பேர் தகுதி பெற்றிருந்த போதும், ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 594 வாக்குகளே நேற்றுப் பதிவாகின. இது 18.16 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றையதினம் குடாநாட்டில் மக்கள் தேர்தலில் வாக்களிக்கப் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. ஏனோதானோ என்று பெரும்பாலானோர் இருந்துவிட்டனர். இதனால் வாக்குச் சாவடிகள் பலவும் வெறிச் சோடியே காணப்பட்டன.

வாக்களிப்பு முடிவடைந்து நேற்று மாலை செயலகத்துக்கு வாக்குப்பெட்டிகள் எடுத்துவரப்பட்ட போது, வெற்று வாக்குப்பெட்டிகளே அதிகமாக எடுத்துவரப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

பொலித்தீன் [illegible] பெட்டிகள் ஒருசில [illegible] பூநகரி, நெடுந்தீவு ஆகிய இடங்களில்

(16ஆம் பக்கம் பார்க்க)

இன்னும் 09 நாள்களில்

JAFFNA International 2010 TRADE FAIR

2010 ஏப்பிரல் 18,19,20 வரை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

## வட்டுக்கோட்டைத் தொகுதியிலேயே கூடுதல் மக்கள் நேற்று வாக்களிப்பு

### அளிக்கப்பட்ட வாக்குகள் 16, 605

யாழ்ப்பாணம், ஏப். 09

நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தின் வட்டுக்கோட்டைத் தொகுதியிலேயே ஆகக்கூடிய - 16,605 வாக்குகள் பதிவாகியுள்ளன.

யாழ். மாவட்டத்தின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 719,022 ஆகும். அதில் 130,594 வாக்குகள் நேற்றுப் பதிவாகியுள்ளன. தபால் மூலம் கடந்த 25, 26ஆம் திகதிகளில் அளிக்கப்பட்ட வாக்குகள் இதில் அடங்கா.

தொகுதி ரீதியாக மொத்த வாக்காளர் எண்ணிக்கையும் நேற்று அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு :-

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட வாக்காளரின் மனநிலை என்னவாயிற்று.....?

யாழ்ப்பாணம், ஏப். 9

வடக்கு கிழக்கில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களில் யாழ்.தேர்தல் மாவட்டத்திலேயே மிகமிகக் குறைந்தளவு (18.6%) வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது. இலங்கை முழுவதிலும் கூட இங்கேயே குறைந்தளவு வாக்குப் பதிவு இடம்பெற்றிருக்கிறது.

கல்வி அறிவுள்ள, புத்திஜீவிகள் நிறைந்த யாழ்.மாவட்டத்தில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டது குறித்து அரசியல் ஆய்வாளர்கள் ஆச்சரியம் வெளியிட்டுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது யாழ்.தேர்தல் மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களிலும், யாழ்.செயலகத்திலும் எடுக்கப்பட்ட படங்களை மேலேகாணலாம்.

தேர்தலில் தனது வாக்கைப் பதிவுசெய்யவரும் வயோதிபப் பெண் ஒருவரை முதற்படத்திலும், சென்.ஜோன்ஸ் பொஸ்கோ, யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்கு மக்கள் வாக்களிக்கச் செல்வதையும் முதல் இரண்டு வரிசைகளில் உள்ள படங்களில் காணலாம்.

வாக்களிப்பு நடைபெற்ற பின்னர் மாலையில் வாக்குப் பெட்டிகள் பொலிஸாரின் பாதுகாப்புடன் பல்வேறு வாக்களிப்பு நிலையங்களிலிருந்து பேருந்து மூலம் யாழ்.செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டு இறக்கப்படுவதை கீழே உள்ள இரண்டு வரிசைப் படங்களிலும் காணலாம். *(படங்கள்: சுகந்தன், தமிழினியன்)*

### ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை

# யாழ். வேம்படி மகளிர் 100வீத சித்தி
# யாழ். இந்து மாணவர் 98 வீத சித்தி

யாழ்ப்பாணம், ஏப். 09

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று நண்பகல் இணையத்தளத்தில் வெளியாகின.

நேற்றிரவு வரை எமக்கு யாழ். இந்துக் கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளின் பெறுபேறுகளே கிடைக்கப் பெற்றன.

அதன்படி யாழ். இந்துக் கல்லூரியில் தமிழ்மொழிமூலம் 145 மாணவர்களும், ஆங்கில மொழிமூலம் 50 மாணவர்களுமாக 195 பேர் தோற்றியிருந்தனர். அவர்களில் 191 பேர் சித்தியடைந்துள்ளனர்.

கல்லூரி வரலாற்றில் 98 வீத மாணவர்கள் சித்தி பெற்றமை முதல் தடவையாகும் என்று கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 193 மாணவர்கள் சித்திபெற்று ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ளனர் என்றும், இது 100 வீத சித்தி என்றும் அதிபர் தெரிவிக்கின்றார்.

நேற்று வெளியான பெறுபேறுகளின் படி யாழ். இந்துவில் இருவர் 9 ஏ யும், 10 பேர் 8 ஏ யும், 16 பேர் 7 ஏ யும், 16 பேர் 6 ஏ யும், 59 பேர் 5 ஏ யும் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர்.

தமிழ் மொழிமூலம் சித்தி பெற்ற (9 ஏ) இரு மாணவர்களின் பெயர்கள் வருமாறு :-

சந்திரமோகன் அருண், மகேஸ்வரன் கஜீபன். ஏனையோரின் பெயர் விவரங்கள் கிடைக்கவில்லை.

யாழ். வேம்படியில் ஆங்கில மொழி மூலம் இருவரும், தமிழ் மொழிமூலம் 12 பேருமாக மொத்தம் 14 மாணவிகள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

8 ஏ சித்திகளை ஆங்கில மொழிமூலம் நால்வரும், தமிழ் மொழிமூலம் 17 பேருமாக மொத்தம் 21 மாணவிகளும் -

7ஏ சித்திகளை ஆங்கிலமொழிமூலம் 4 வரும் தமிழ்மொழி மூலம் 20 பேருமாக மொத்தம் 24 மாணவிகளும்-

6 ஏ 30பேரும்,5ஏ19பேரும்,4ஏ28பேருமாக 193 மாணவிகள் சித்தியடைந்துள்ளனர்.

**யாழ். வேம்படி.**

வேம்படி மாணவிகளின் பெறுபேற்று பெயர் விவரங்கள் வருமாறு :-

9 ஏ சித்திபெற்றோர்

ஆங்கில மொழிமூலம் - மாதங்கி நவ குமாரன், சரண்யா தவராசா. தமிழ் மொழிமூலம் - பவித்ரா இரங்கநாதன்,அருணியாட்ண சிங்கம், சயினி பாலச்சந்திரன், ரேலங்கி மணி வாசகம், மிதுர்கா மிகுந்தன், திலுக்ஷி பூரண லிங்கம், நர்சுஜா சர்வானந்தன், கிருஷாந்தி வைகுந்தவாசன், விதுர்ஷா மகேந்திர ராஜா, பிரஷாயினி கணேசமூர்த்தி, சர்மி சிவபாலன், சோபிகா சண்முகவேல்.

**8 'ஏ' சித்தி பெற்றோர்.**

ஆங்கில மொழிமூலம் - அனுஷிதா ரவீந்திரன் (8 ஏபி), டசிறியா கரிகாலன் (8 ஏபி), ரூபிகா ரவீந்திரன் (8 ஏபி), சுஜிதா சிவசுப்பிரமணியம் (8 ஏபி).

தமிழ் மொழிமூலம் - லலிதா ஜெகநாதன், சாந்தமரீன் மேரிஜேசப், ஜெனனி ஜெகதீசன், துவனிகரா சண்முகசுந்தர மூர்த்தி, சரண்யா மகேந்திரன், சியாமணி அருணாசலம், சுபாஜினி யோகலிங்கம், தனுஜா சிவகுமாரன், துவாரகா தபானந்தம், துவார்னிகா பாலகிருஸ்ணன் **(15 ஆம் பக்கம் பார்க்க)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## எம்.பி.பதவி படும் பாடு!

பொதுத் தேர்தல் திருவிழா பூர்த்தியாகும் நிலைமை, உச்ச - பிரதான - நிகழ்வான வாக்களிப்பு முடிவடைந்து வாக்கெண்ணும் நடவடிக்கைகளும் இன்று அதிகாலை முதல் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டன.

இன்று விடிகாலை இந்தப் பத்தி வாசிக்கப்படும் போது பல மாவட்டங்களிலும் தேர்தல் பெறுபேறுகளின் போக்கு எப்படி இருக்குமென்பது ஓரளவு தெளிவாகி இருக்கும்.

அதேசமயம், மறுபுறத்தில் விருப்பு வாக்குகளுக்கான சில்லெடுப்பும் சீற்றமடையத் தொடங்கியிருக்கும்.

இதுவரை சுவரொட்டிகளில் புன்னகை தவழக் காட்சியளித்த வேட்பாளர்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் விருப்பு வாக்கு எண்ணிக்கை தற்சமயம் சூடுபிடித்திருக்கும். சுவரொட்டியில் சிரித்தவர்கள் பொதுவாழ்வில் நகைப்புக்கிடமாவார்களா என்பது இன்று மாலைக்குள் தெளிவாகிவிடும்.

1978 இற்கு முன்னர் இடம்பெற்ற பொதுத் தேர்தல்களின்போது ஒரு விடயம் முக்கியமாக கணிக்கப்படுவது வழமை. ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் போட்டியிடும் வேட்பாளர்களில் அங்கு அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் ஒரு குறிப்பிட்ட வீத வாக்குகளை தன்னும் பெறத் தவறியோர் வேட்பு மனுத் தாக்கலுக்கான கட்டுப்பணத்தை இழந்தவர்களாக அறிவிக்கப்படுவர். இப்படித் தேர்தலில் கட்டுப்பணம் இழப்பதென்பது அக்காலத்தில் பெரும் அவமானம், தலை குனிவு என்றும் கருதப்பட்டுவந்தது.

அப்படிப் பார்த்தால் இந்தத் தேர்தலில் வாக்குக் கணக்கெடுப்பின்போது தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றிய தீர்மானத்தில் பரிசீலனைக்கு உட்படுத்தப்படாமல் தவிர்க்கப்பட்டுப் போகும் வேட்பாளர்களின் எண்ணிக்கை பல்லாயிரத்தைத் தாண்டும் என்பது நிச்சயம்.

அதாவது, தாம் போட்டியிட்ட மாவட்டங்களில் அளிக்கப்பட்ட வாக்குகளில் ஐந்து சதவீதத்தைத் தன்னும் பெறாத கட்சிகள் மற்றும் அணிகள் அடுத்த சுற்று வாக்கு எண்ணிக்கைக்குள் உள்வாங்கப்படாமல் புறக்கணிக்கப்படுவர். இத்தகைய அணிகள் மற்றும் குழுக்களைச் சேர்ந்தோரே இத் தேர்தலில் 'கட்டுப்பணமும்' இழந்தவர்களாக கருதப்பட வேண்டியவர்கள் ஆவார்.

அப்படிப் பார்த்தால் இத் தேர்தலில் பல நூறு கட்சி அணிகளும், சுயேச்சைக் குழுக்களும் முதல் சுற்றுக் கணக்கெடுப்போடு 'அவுட்' ஆகியிருக்கின்றமை பற்றிய செய்தியை - தகவலை - நாம் இன்று காலையில் அறிய வாய்ப்புக் கிட்டும்.

அதாவது, இத் தேர்தலில் 'கட்டுப்பணம்' இழந்தவர்களாகக் கருதப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கையும் பல்லாயிரம் தாண்டும் என்பதும் உறுதியானதே.

ஆனால் முன்னைய காலம்போல கட்டுப்பணமும் இழந்த அவமானமும், தலைகுனிவும் இவர்களுக்கு இருக்கப்போவதில்லை என்பதும் நிச்சயம்.

ஏனெனில் இப்படி முதல் சுற்றிலேயே 'அவுட்' ஆவோம் என்பது தெரிந்துகொண்டுதான் இத்தனை ஆயிரம் வேட்பாளர்களும் பெப்ரவரி மாதம் மூன்றாம் வாரத்துக்குப் பின்னர் தங்களின் வேட்பு மனுப்பட்டியலைச் சமர்ப்பித்திருந்தனர். எதிர்பார்த்து வாங்கிக் கொண்ட தோல்விதான் என்பதால் - அது படுதோல்வி என்றாலும் கூட - அதற்காக அவர்கள் கவலைப்படவோ அலட்டிக் கொள்ளவோ போவதில்லை என்பதும் உண்மைதான்.

தற்போதைய அரசியல் போக்கில் இன்னொரு வேடிக்கையும் - அதிசயமும் - கூட நடக்கலாம். இப்படிப் படுதோல்வி அடைந்தவர்கள் கூட பின்கதவால் நாடாளுமன்ற உறுப்பினர்களாகி விடலாம் என்பதுதான் அது. அப்படி நடப்பது புதுமையான விடயம் அன்று. கடந்த பொதுத் தேர்தலில் பின்னரும் அப்படி நடந்திருக்கின்றது.

2004 ஏப்ரலில் நடந்த பொதுத் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அணியின் சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் - கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டவர் மேர்வின் சில்வா. அந்தப் பெரிய கொழும்பு மாவட்டத்தில் மூவாயிரம் விருப்பு வாக்குகளைக்கூடப் பெற முடியாமல் பட்டியலில் கடைசி வரிசைக்குத் தள்ளப்பட்டு தோல்வியடைந்தார் எனினும், அவருக்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுள் ஒன்று அவரது மனைவிக்கு முதலில் வழங்கப்பட்டது. அவரது மனைவி சில வாரங்கள் அந்தப் பதவியை அலங்கரித்தார். பின்னர் இராஜினாமா செய்தார். அந்தச் சமயத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் விசுவாசியாக இருந்த மேர்வின் சில்வா, இராஜினாமா செய்த தமது மனைவியின் இடத்திற்கு ஆளுந்தரப்பு தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டார். இதுதான் தேர்தலில் படுதோல்வியடைந்த மேர்வின் சில்வா பின் கதவால் நாடாளுமன்றத்துக்குள் புகுந்த கதை.

ஆனால் அவர் பின்னர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசுவாசியாக தம்மை ஆக்கிக்கொண்டு அமைச்சருமாகி நாடாளுமன்றத்திலும் வெளியிலும் தொடர்ந்து அட்டகாசம் பண்ணுகின்றமை வேறு கதை.

இம்முறை இப்படி எத்தனை மேர்வின் சில்வாக்கள் பின்கதவால் நாடாளுமன்றத்திற்கு வருவார்களோ...? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# நேற்றைய தேர்தலில் மோசமான வன்செயல்கள்; ஐ.ம.சு கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மோதல்!

கொழும்பு, ஏப்.09

இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல், மிக அதிகளவிலான வன்முறைகள் மற்றும் சட்ட மீறல்களுக்கு மத்தியில் நேற்று நடைபெற்றது.

துப்பாக்கிப் பிரயோகம், அச்சுறுத்தல், மிரட்டல் போன்ற மிகப் பாரதூரமான வன்முறைகள் இடம்பெற்றுள்ளன என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

வாக்களிப்பு ஆரம்பமாகி சில மணி நேரங்களிலேயே 160க்கும் மேற்பட்ட சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவாகிவிட்டன என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மத்தியிலேயே அதிகளவு மோதல்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் அக்கூட்டணிக்குஎதிராகவே அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேர்தல் கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரச ஆதரவாளர்கள் வாக்காளர்களை அச்சுறுத்தி உள்ளனர். சில இடங்களில் வாக்குச் சீட்டுகளைப் பறித்துள்ளனர் என தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

### நண்பகல் வரை 160 தேர்தல் வன்செயல்கள்

நேற்று நண்பகல் வரை 160 சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் 33 சம்பவங்கள் பாரதூரமானவை எனத் தெரிவித்துள்ள தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், பாரிய சட்டமீறல்கள் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலை விட நிலைமை மோசமாகக் காணப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளது.

காலி மாவட்டம் ஹினிதும பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மத்தியில் இடம்பெற்ற மோதலின் போதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைச்சர் பியசேன கமஹேயின் ஆதரவாளர்களும் மாகாண சபை உறுப்பினர் முத்துஹெட்டிகமவின் ஆதரவாளர்களும் மோதலில் ஈடுபட்டனர் என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் பியசேன கமஹே ஆயுதங்களுடன் நடமாடியதையும் ஏனைய வேட்பாளர்களை அச்சுறுத்தியதையும் காண முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குருநாகலிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மத்தியில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குருநாகல் மாவட்ட வேட்பாளர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சாலிந்த திஸநாயக்க ஆகியோரது ஆதரவாளர்களுக்கிடையிலேயே மெச்சிறிபுர பகுதியில் இந்த மோதல் இடம்பெற்றது.

இதன்போது சாலிந்த திஸநாயக்கவின் ஆதரவாளர்கள் மூவர் காயமடைந்துள்ளனர். வாகனங்களுக்கும் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பினதும் வாக்களிப்பு நிலைய முகவர்கள் அச்சுறுத்தப்பட்டு வாக்களிப்பு நிலையங்களில் இருந்து விரட்டப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாவலப்பிட்டியில் உள்ள 10வாக்களிப்பு நிலையங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றன என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்றுகொண்டிருந்தவர்கள் மிரட்டப்பட்டு துரத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற சம்பவங்கள் புத்தளம் ஆனமடுவ மற்றும் காலி மாவட்டத்தின் மதவக்குலம பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளன.

காலி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் சந்திம வீரக்கொடியின் வாகனம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இன்னுமொரு வேட்பாளரால் தாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கம்பஹா மாவட்டம் தொம்பேயில் ஜனநாயக தேசிய முன்னணியின் வாக்களிப்பு நிலைய முகவர் ஒருவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களால் வாக்களிப்பு நிலையத்திலிருந்து விரட்டப்பட்டுள்ளார்.

(அ-சி)

# மெனிக்பாம், கிளிநொச்சிப் பகுதி மக்கள் வாக்களிக்க முடியாதவாறு தடுக்கப்பட்டனர்

வவுனியா, ஏப். 09

மெனிக் பாம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்த மக்களில் ஆயிரக்கணக்கானோர் நேற்று வாக்களிக்கவில்லை. அவர்களை வாக்களிக்கவிடாது முகவர்கள் தடுத்தனர் என்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்புத் தெரிவித்தவை வருமாறு:-

மெனிக் பாம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்த மக்களில் ஆயிரக்கணக்கானோர் நேற்று வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. அவர்களுக்குச் சரியான வழிகாட்டல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

வாக்களிப்பதற்காக மெனிக் பாம், கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்றவர்களை அங்கு வாக்களிக்கவிடாமல் தடுத்த முகவர்கள் கிளிநொச்சிக்குச் சென்று வாக்களிக்குமாறு கோரினர்.

அதேபோல் கிளிநொச்சி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்றவர்களை மெனிக் பாம் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லுமாறு அங்குள்ள முகவர்கள் கூறினர்.

அந்த மக்களை ஏற்றிச்செல்ல போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. வாக்களிப்பு நிலைய முகவர்கள் கேட்ட ஆவணங்கள் எவையும் அந்த மக்களிடம் இருக்கவில்லை.

இதனால் ஆயிரக்கணக்கானோர் வாக்களிக்க முடியாமல் போனது.

- என்று அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக, மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த பஸ் உரிமையாளர்களை மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் ஆதரவாளர்கள் துன்புறுத்தினர் என தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களை வாக்களிப்பு நிலையங்களுக்கு அழைத்துச் செல்லும் நடவடிக்கையில் தனியார் பஸ்கள் ஈடுபட்டிருந்தன. எனினும், அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் ஆதரவாளர்கள் சாரதிகளை அச்சுறுத்தியதுடன், அந்த பஸ்களை தாங்கள் எடுத்துக்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனால் இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டது என தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, வவுனியாவில் முகாம்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு வாக்களிப்பதற்கான போக்குவரத்து வசதிகள் எதுவும் செய்துகொடுக்கப்படவில்லை. அவர்கள் உரிய வாக்களிப்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படாமல் வேறொரு வாக்களிப்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

# தேர்தல் நேர்மையாக நடைபெறவில்லை

## ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 09

நேற்று இடம்பெற்ற பொதுத் தேர்தல் வாக்களிப்பு நீதியானதாகவும், நேர்மையானதாகவும் அமைந்திருக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டி உள்ளது. சில இடங்களில் வாக்குகளை மீள எண்ணும்படி கோரப் போவதாகவும் அது தெரிவித்துள்ளது.

வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டமை, எதிர்க்கட்சிகளின் வாக்களிப்பு நிலைய முகவர்கள் விரட்டப்பட்டமை போன்ற சம்பவங்கள் இடம்பெற்றன என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இது நேர்மையான, நீதியான தேர்தல் அல்ல. அடுத்தகட்டம் குறித்து ஆராயவுள்ளோம். நாடளாவிய ரீதியில் மிகக் குறைந்தளவானவர்களே வாக்களித்துள்ளனர் என தகவல்கள் கிடைத்துள்ளன. தொடர்ச்சியாக அரசு நடத்திவரும் தேர்தல்களால் மக்கள் சலிப்பும், விரக்தியும் அடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

(சி)

## இராணுவத்தினரின் ஏற்பாட்டில்

# யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பெண்கள், ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்.9

பொதுமக்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் நல்லுறவை ஏற் படுத்தும் நோக்கில் சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டித் தொடர் ஒன்றை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்த இலங்கை இராணுவத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இதன்படி அண்மையில் வெலகெதர மைதானத்தில் நடைபெற்ற அகில இலங்கை மாவட்டங்களுக்கிடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் அனைத்து அணிகளையும் வெற்றிகொண்ட வடக்கு கிழக்கு பெண்கள் அணிக்கும் யாழ்ப்பாண பாதுகாப்பு படை பெண்கள் அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

மாலை யாழ்ப்பாண மாவட்டதில் சிறந்த கிரிக்கெட் வீரர்களைக் கொண்ட ஆண்கள் அணிக்கும் பாதுகாப்புப் படை வீரர்களுக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளதாகவும் யாழ். பாதுகாப்பு படைகளின் தலைமையகம் அறிவித்துள்ளது. (ஓ-10)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 27 | 10.04.2010 |
| | சனிக்கிழமை |
| திதி | : ஏகாதசி |
| | மு.ப. 12.47 |
| நட்சத்திரம் : | அவிட்டம் |
| | மு.ப. 9.26 |
| சுபநேரம் | : 03.06-04.36 வரை |
| ராகுகாலம் | : 09.06-10.36 வரை |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

லண்டனில் வசிக்கும் ஹரன் - கெவினா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹரி இன்று தனது முதலாவது பிறந்தநாளை வெகுவிமரிசையாக லண்டனில் கொண்டாடுகின்றார்.
ஹரிசன் குட்டியை சந்நிதி முருகன் அருள்பெற்று சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
அப்பப்பா நவரத்தினம், அப்பம்மா ஞானலக்ஷ்மி,
பெரியப்பா கண்ணன், பெரியம்மா கலாநந்தி,
அத்தை கிருபா, அண்ணா கபிலன்.

**தகவல்: தி.நவரத்தினம் (மெம்பர்)**

**போக்காலை வீதி, உடுப்பிட்டி.**




**ஹரன் ஹரி (ஹரிசன்)**

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2111 திகதி 07-04-2010

ஆங்கில எழுத்திற்கும் O

வெற்றி எண்கள் **04 07 30 43** போனஸ் இல: **38**

ஜக்பொட் பரிசு ரூ. **14,876,000/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 182136 | 20/- | 3,642,720/- |
| 2 இல | 13116 | 100/- | 1,311,600/- |
| 3 இல | 265 | 1,000/- | 265,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7299 | 40/- | 291,960/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 495 | 1,000/- | 495,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,876,000/- | - |
| 1 இல + போனஸ் இல | 8653 | 100/- | 865,300/- |
| 2 இல + போனஸ் இல | 413 | 500/- | 206,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 339 | 200/- | 67,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,778,380/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 212758 | | 9,378,380/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - I.P. பிரேமசிறி - பியகம.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - W.M. நிரந்த பண்டார - மஹியங்கனை.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 201803493-0-28 |
| கண்டி | 201794822-3-08 |
| கொழும்பு | 201796318-2-41 |
| கம்பஹா | 201788296-6-12 |
| கண்டி | 201798626-4-49 |
| நுவரேலியா | 201790577-3-41 |
| மட்டக்களப்பு | 201798382-2-02 |
| மாத்தறை | 201803876-6-01 |
| அநுராதபுரம் | 201797703-7-38 |
| காலி | 201791179-0-30 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
**ரூ.15,373,400/-**

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஏப்ரல் 10 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 506
சீட்டிழுப்பு திகதி: 07.04.2010

வெற்றி எழுத்து: **X** வெற்றி இலக்கங்கள்: **45 52 56 61**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 12,950,437.60 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 201 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 365 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10341 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 50/- | 6033 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 149319 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 30/- | 23906 |

**இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,306,310.00**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
**ரூ.13,116,638.40**

## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 11
திகதி - 07.04.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **Y** அதிர்ஷ்ட இலக்கம் **6** வெற்றி இலக்கம் **3 9 3 1 4**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | பொருந்தும் இலக்கங்கள் | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y 6 3 9 3 1 4 | ரூ. 21,554,947.00 | - |
| 1 பரிசு | 6 3 9 3 1 4 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 9 3 1 4 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 9 3 1 4 | ரூ. 10,000.00 | 28 |
| 4 பரிசு | 3 1 4 | ரூ. 1,000.00 | 276 |
| 5 பரிசு | 1 4 | ரூ. 50.00 | 2819 |
| 6 பரிசு | 4 | ரூ. 20.00 | 26798 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | பொருந்தும் இலக்கங்கள் | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| 7 பரிசு | 3 9 3 1 | ரூ. 1,000.00 | 29 |
| 8 பரிசு | 3 9 3 | ரூ. 100.00 | 290 |
| 9 பரிசு | 3 9 | ரூ. 50.00 | 2793 |
| 10 பரிசு | Y | ரூ. 20.00 | 11024 |
| 11 பரிசு | Y 6 | ரூ. 100.00 | 1313 |

**இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,082,340.00**

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
**ரூ.22,051,446.00**

## வில்லிசைக் கலைஞருக்கு ஞாயிற்றன்று மணி விழா

யாழ்ப்பாணம், ஏப்.9

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரனின் கௌரவிப்பு நிகழ்வும் மணி விழாவும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.15 மணிக்கு அத்தியடிப் பிள்ளையார் கோயிலில் இடம்பெற விருக்கின்றன.

அருளாசி, வாழ்த்துரை, பாராட்டுரை என்பன இடம் பெறும்.

வில்லிசைச் செல்வர் என்ற பட்டமளித்து ஸ்ரீதரன் கௌரவிக்கப்படவிருக்கிறார். (ஓ-1)

## தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டி


யாழ்ப்பாணம், ஏப். 09

வடமராட்சி கல்வி வலயத்தில் தமிழ்த்தினப் போட்டியில் எழுத்தாக்கப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் வட இந்துமகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய கோட்ட மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களையும் மருதங்கேணிக் கோட்டத்தில் இடம் பெற்ற போட்டிகளில் முதலாம் இடம் பெற்ற மாணவர்களையும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ-1)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 04 . 05 . 1930



இறப்பு 10 . 03 . 2010

**அமரர் ஆழ்வார் கனகு**

பாசத்தால் எம்மை ஊட்டி வளர்த்த ஐயாவே!
சோகத்தால் மூழ்கினோம் கொடிய நோய்
உங்களைக் கொன்ற செய்திகேட்டு
ஆணிவேராய் எம்மைப் பேணிவளர்த்த ஐயாவே!
விழுதுகள் நாம் விம்முகின்றோம் - விழிகளில்
உங்கள் நினைவுகளோடு
முப்பத்தொரு நாள்கள் கழிந்தன இன்றோடு
உங்கள் நினைவுகளோ என்றும் எங்கள் நெஞ்சோடு.

உங்கள் நினைவுகளுடன்:
பேரப்பிள்ளைகள்
சிவப்பிரகாஷ், தாட்சாஜினி.

கரவெட்டி. (96716)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாநகராட்சி மன்ற முன்பள்ளிச் சிறுவர்களுக்கான கண்காட்சி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பொதுசனத் தொடர்பு அதிகாரி இரத்தினசிங்கம் கண்காட்சியைத் திறந்து வைப்பதையும், மக்கள் காட்சியைப் பார்வையிடுவதையும் முதல் இரு படங்களிலும், பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்த 'அறிவுள்ள காகம்' கதையின் காட்சியை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் அடிப்படைத் தேவைகளைத் தந்துதவுங்கள்

## இனியவாழ்வு இல்லத்தலைவர் லயன்ஸ் கழகத்திடம் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஏப். 9

வன்னிப் பிரதேசத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து கைதடியில் நவீல்ட் பாடசாலையில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி கல்விகற்றுவரும் தமது அமைப்பைச்சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான அடிப்படைத் தேவைகளைத் தந்துதவுமாறு இனியவாழ்வு இல்லத்தை மீளமைக்க முனைவோர் தலைவர் லயன்ஸ் கழக உதவிச் செயலாளரைக் கேட்டுள்ளார்.

இனிய வாழ்வு இல்லத் தலைவர் ப.இராசகுமார் அரிமாக்கழக உதவிச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எமது இனிய வாழ்வு இல்லமானது 1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 17 ஆம் கட்டை வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு எனும் முகவரியில் இயங்கி வந்தது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து தற்பொழுது ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் உள்ள ஒரு வீட்டில் இயங்கி வருகின்றது. எமது இல்லம் இடம்பெயர்ந்துள்ளதால் செவிப்புலன், கட்புலன் அற்ற மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு யாழ்.பல்கலைகழகத்தில் கல்வி கற்கும் பார்வையற்ற மாணவர்கள் எமது அலுவலகம் இயங்குவதற்கான தற்காலிக இடத்தைப்பெற்றுத்தந்துள்ளார்கள்.

அலுவலகம் இயங்குவதற்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாததினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே அலுவலகத்தில்குத் தேவையான மேசை, கதிரை, அலுமாரி, துவிச்சக்கரவண்டி, கணனி ஆகியவற்றைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதே நேரம் இனிய வாழ்வு இல்லத்தில் கல்வி கற்று வந்த 40 மாணவர்கள் தற்பொழுது கைதடி நவீல்ட் பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் கல்வி கற்பதற்கான அடிப்படை வசதிகள் முழு அளவில் இல்லாததினால் மாணவர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றார்கள். எனவே இவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு கல்வி உபகரணங்கள் உட்பட அடிப்படைத் தேவைக்குரிய பொருள்களைத் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது. (115)




யாழ்ப்பாணம், ஏப். 9

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஒ-1)

* * *

கொழும்புத்துறை, ஏப். 9

யாழ். அத்தியடி சிதம்பர நடராஜ வீர கத்திப்பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய்து.

தேர்த்திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கும் தீர்த்தத்திருவிழா மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கும் இடம்பெறும். (ஒ-135)

# மருதடி விநாயகர் மகோற்சவ காலத்தில் பிரதான வீதியில் வாகனங்கள் நிறுத்தப்படாது

## ஆனைக்கோட்டை சந்திவரை வேகக்கட்டுப்பாடும் அமுலில்

சண்டிலிப்பாய், ஏப். 9

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ தினத்தை முன்னிட்டு மானிப்பாயிலிருந்து ஆனைக்கோட்டைச் சந்தி வரை பிரதான வீதியில் வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதுடன் வாகங்களுக்கான வேகக் கட்டுப்பாடும் கடுமையாக அமுல்ப்படுத்தப்படவிருக்கின்றது. இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள வலி.தென்மேற்கு பிரதேசசபைச் செயலர் இந்த ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்த பொலிஸாரின் உதவியைக் கோரியுள்ளார்.

குடாநாட்டில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் சுமார் 20 கோடி ரூபா செலவில் முழுமையான கருங்கல்லினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்திய சிற்பக் கலைஞர்களால் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவதினால் கடந்த ஐந்து வருடங்களாக வருடாந்த மகோற்சவம் நடைபெறாமல் இருந்துவருகிறது.

மகோற்சவம் இடம்பெறாத போதிலும் திருவிழாக்கள் நடைபெறும் 18 தினங்களிலும் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன.


மகோற்சவ காலங்களில் ஆலயத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் மானிப்பாய் பிரதேசசபைக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிகள், காவல் துறையினர், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏ-9 தரைப்பாதை போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டதைத் தொடர்ந்தும், நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலை காரணமாகவும் இம்முறை பெரும் தொகையான மக்கள் ஆலயத்திற்கு வந்த வண்ணம் இருக்கிறார்கள். தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா நடைபெறும் தினங்களில் தென்னிலங்கையிலிருந்து நடைபாதை வியாபாரிகள் உட்பட பல ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் காரணமாக மானிப்பாயிலிருந்து ஆனைக்கோட்டைச் சந்தி வரை வீதியில் வானங்கள் நிறுத்தப்படுவது தடைசெய்யப்படுமென்றும், வேகக் கட்டுப்பாட்டை அமுல்ப்படுத்துவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு பொலிஸார் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மக்களின் நலன் கருதி தற்காலிகமாக நான்கு மலசல கூடங்கள் அமைப்பதென்றும், இனிப்பு வகைகள் உட்பட உணவுப் பொருள்களை வியாபாரம் செய்பவர்கள் மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (115)




## புண்ணிய கிராம வேலைத்திட்ட ஆரம்ப வைபவம் நாளை

யாழ்ப்பாணம், ஏப். 9

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் புண்ணிய கிராம வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் ஆரம்ப வைபவம் நர்ளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மல்லாகம் ஸ்ரீகாமாட்சி அம்மன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அ.நிருத்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. வடக்குப் பிரதேசசபைச் செயலாளர் இ.அருணகிரி கலந்துகொள்வார். (1)

# சேமலாப நிதியை வழங்கும் வகையில் விசேட நடமாடும் சேவை விரைவில்

யாழ்ப்பாணம், ஏப். 9

ஊழியர் சேமலாப நிதியை உரியவர்கள் விரைவாகப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு விசேட நடமாடும் சேவை ஒன்று விரைவில் நடத்தப்படவுள்ளது.

இந்த நடமாடும் சேவையை அடுத்த மே மாதத்தில் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். தொழித் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சேமலாப நிதிக்கு விண்ணப்பித்து இதுவரை கொடுப்பனவுகளைப் பெறாதவர்கள் இந்த நடமாடும் சேவை மூலம் பயனடைய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (4-224)

# வலி.கிழக்குப் பிரதேசங்களில் வீடு வீடாக விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 9


நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுகாதாரப் பகுதியினர், இராணுவத்தினர், பொது அமைப்பினர் போன்றோர் ஒன்றிணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் சம்பந்தமான இத்தகைய பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.


அதனைவிடக் குடியிருப்பாளர்களின் சுற்றாடல் பகுதியை அவதானித்து குப்பை மற்றும் கழிவுகள் காணப்பட்டால் உடன் அவற்றை அகற்றுமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டும் வருகின்றன. (4-224)

# விழியிழந்த போதும் தளராது பயின்று ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சையில் உயர் பெறுபேறு

## வாழ்வக மாணவர்கள் சாதனை



தர்மதன்



மரிஸ்ரெலா

நேற்று வெளியான ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில் சிறந்த அடைவு மட்டத்தைப் பெற்று வாழ்வகத்தைச் சேர்ந்த விழிப்புலனற்ற இரு மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி கற்றுவரும் சொர்ணசிங்கம் தர்மதன் 7ஏ, 2பி என்னும் பெறுபேற்றினைப் பெற்றுள்ளார். இலங்கையில் தமிழ்மொழி மூலம் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய விழிப்புலனற்றோரில் மிக உயர்ந்த பெறுபேற்றைப் பெற்றவர் என்ற பெருமையும் இவர் அடைந்துள்ளார்.

இராமநாதன் கல்லூரியில் பயில்கின்ற ரவீந்திரபாலன் மரிஸ்ரெலா என்னும் விழிப்புலனற்ற மாணவியும் சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

கல்வியில் சாதனைபடைத்த விழிப்புலனிழந்த நிலையிலும் வாழ்வகத்தைச் சேர்ந்த இவ்விரு மாணவர்களுக்கும் பாராட்டுக்கள் குவிந்த வண்ணமிருக்கின்றன. (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**Knowledge Universe**

Malaysian soft Skills Developement Centre

**Certificate in Office Management**

வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர்,யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் 40 மணி நேரப் பயிற்சி நெறி. பல்தேசியக் கம்பனிகளில்(MNC) உயர்பதவி வகித்த பயிற்றுநரிடமிருந்து

**2nd Intake 16.04.2010**

**Call for a Free consultation 0777302882**

40 இற்கு மேற்பட்ட பல்வேறுபட்ட வெற்றிடங்கள் உண்டு.

**Course Covers:** Communication Skills, International Exposure Leader ship, Management Skills, Working Culture, Interview Skills etc.

www.kugroup.info

No .75, Temple Road, Jaffna


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 04 ★ 05 ★ 1930



உதிர்வு 10 ★ 03 ★ 2010

### அமரர் ஆழ்வான் கனகன்

*ஆண்டவனின் கழலடைந்து,*
*நாள்கள் முப்பத்தொன்றாயிற்றோ?*
*ஆறுமோ எம்துயர்*
*அவனியில் நாம் இருக்கும் வரை*

ஆழ்வான் கனகன்
இமையாணன் கிழக்கு,
செம்பாட்டோலை,
உடுப்பிட்டி. (96709)

சி.இராசேந்திரம்
குடும்பத்தினர்.


## சாக்கு உற்பத்திகள்




RTI
ரொஷ்னி ட்ரேட் இன்டர்நெஷனல் (பி) லிமிடட்.
23, அப்துல் ஹமீட் வீதி, கொழும்பு -12
தொ.பே : 011-2451700/ 01
தொ.நகல் : 011-2436638 மின் அஞ்சல் : roshni@slt.lk
இணையத்தளம் : www.roshnitrade.com

ISO 9001:2008 CERTIFIED No. 04-B-10-QMS 0017

**Meet us at Stalls B 150 & 151 at the Jaffna Trade Fair**


## மரண அறிவித்தல்

### வேலாயுதம் திருநாவுக்கரசு

(வர்த்தக சங்கத் தலைவர், வேலணை, இந்திரா பல்பொருள் வாணிபம்)



வேலணை, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை, 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் திருநாவுக்கரசு 07.04.2010 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் பிள்ளையம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, தம்பிஐயா, லிங்கப்பிள்ளை, நாகராசா, யோகசுந்தரம் மற்றும் தர்மலிங்கம், காலஞ்சென்ற தங்கராசா ஆகியோரின் மைத்துனரும்இலக்கணகுமார் (நிர்மலா ப.பொ.வ), இந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மலாதேவி, தர்மரத்தினம் (ராசன்) ஆகியோரின் மாமனும் கிரிசாந்தன், கிரிகஜன், துகிர்ஷன், சோபிகா, தனோஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2010) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை 6ஆம் வட்டாரம்,
வேலணை. (96711)

தகவல்:
குடும்பத்தினர்.


**Affordable and Internationally Recognised**

# MBA

**JAFFNA**

**Master of Business Administration**

**Specialize in** Marketing, Human Resources, Information Systems, Finance

Sikkim
**Manipal University**

An integrative program designed to provide an advanced course in management for those seeking senior positions in industry, commerce and public services. The core subjects of the Manipal MBA are aimed at developing knowledge and skills in fundamental management disciplines, improving the decision making abilities of participants and producing managers of the highest quality.

**The most accepted foreign MBA program in Jaffna**

**Third Batch Commences on**
**25-04-2010 at 10.00 am**



*For information contact* | Kasthoori 021 4900900

Manipal
INSPIRED BY LIFE

Manipal International Study Centre
**IIS CITY CAMPUS**
#200,Sivan Pannai Road, Jaffna.
T.P: 021 222 8060
Web: www.iiscitycampus.com


## விசேட வங்கிச்சேவை

தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியில் இருந்து முற்பகல் 12 மணிவரையும் 14ஆம் திகதி புதன்கிழமை காலை 9.15 மணியில் இருந்து மு.ப. 12.30 மணிவரையும் செலான் வங்கியின் பணிகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 4.15 மணிக்கு உரும்பிராய் மூன்று கோயில் மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 4.15 மணி பாஷையூர் சென். அன்ரனிஸ் (வெள்ளை) விளையாட்டுக் கழகம் எதிர் அரியாலை விளையாட்டுக் கழக அணி.

பிற்பகல் 5 மணி குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி எதிர் பாசையூர் சென்.அன்ரனிஸ் (மாருன்) விளையாட்டுக்கழக அணி. (04-23)

## கேரதீவு - சங்குப்பிட்டியூடாக மன்னாருக்கு பேருந்துச் சேவையை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

மன்னார், ஏப். 9

மன்னார் - யாழ்ப்பாணம் பேருந்து சேவையைக் கேரதீவு - சங்குப்பிட்டியூடாக உடன் ஆரம்பித்து வைக்கும்படி, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னைய காலங்களில் இச் சேவை தினமும் பல முறை நடைபெற்று வந்தது. இந்தப் போக்குவரத்துக்கான நேரம் மூன்று மணித்தியாலங்கள் மட்டும்தான் அரச ஊழியர்கள் முதல் பொதுமக்கள் வரை அனைவருமே இச் சேவையைப் பயன்படுத்தி பெரிதும் பயன்பெற்று வந்தனர். தற்போது இச்சேவை முற்றான நிறுத்தப்பட்டுள்ளது.

மன்னார் - யாழ்ப்பாணம் ஏ-9 வீதியில் பேருந்து சேவைகள் நடைபெறுகின்றன. மன்னாரிலிருந்து காலை 4.30 மணிமுதல் இச் சேவை நடைபெறுகின்றது. அதுபோல் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6 மணிக்கு மன்னார் சேவையும் நடைபெறுகின்றது. இருந்த போதிலும் மிகவும் நீண்ட நேரத்தின் பின்னரே இச்சேவை நிறைவு பெறுகின்றது. சுமார் 6 மணி முதல் 7 மணி வரை பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே குறைந்த நேரத்தில் மன்னாரை அடையக்கூடிய கேரதீவு - சங்குப்பிட்டியூடான சேவையை ஆரம்பிக்குமாறு பொது மக்கள் கேட்டுள்ளனர். (4-80)

## யோகர் சுவாமிகளின் குருபூசைத் தினம்

யாழ்ப்பாணம், ஏப்.9

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யோகர் சுவாமிகளின் குருபூசை தின விழா எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத்விப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சைவப்புலவர் க.நித்தியதசீதரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (204)


### தேவை

சமையல் வேலை தெரிந்தவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு: அபர்ணா உணவகம்
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
T.P.: 021 490 3588

### யாழ்.-கொழும்பு பயணத்திற்கு

யாழ்.-கொழும்பு சொகுசு வான் சேவை. உங்கள் இல்லங்களில் வந்து ஏற்றி உரிய இடத்தில் சேர்க்கப்படும். ஒருவர் கட்டணம் 1000/=

தொடர்பு: 021 3008238, 077 9770027 (96547)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயக் காணிகளிலிருந்து தமிழர்களை வெளியேறுமாறு மதகுருமார் வற்புறுத்து

## பிரதேச செயலருக்கு விவசாயிகள் சங்கம் மகஜர்

''தமிழ் மக்கள் விவசாயம் செய்யும் வயல் நிலங்களைவிட்டு வெளியேறும்படி மதகுருமார் கோரி வருகின்றார்கள். இந்த நிலங்கள் புதைபொருள் ஆராய்ச்சிக்குரியவை எனக் காரணம் கூறி, மதகுருமார், எம்மை விவசாயம் செய்யவிடாமல் தடுத்து வருகின்றனர். இதற்குத் தகுந்த தீர்வு தரவேண்டும்''

- என்று மாதுல்வேவ குடியேற்றத் திட்ட விவசாயிகள் சார்பில் விவசாயச் சங்கச் செயலாளர் ரி.இராஜமணி, பிரதேச செயலாளருக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நொச்சிக்குளம் கிராமத்திலுள்ள மாதுல்வேவ விவசாயக் குடியேற்றத்திட்டத்தில் 140 குடும்பங்கள் உள்ளன. இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தோர் சாந்திபுரத்தில் விவசாயம் செய்து வருகின்றனர்.

அண்மையில், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மதகுரு ஒருவர், எமது காணிகளுக்குள் அத்துமீறிப் புகுந்து, இக் காணிகளில் அரசு புதைபொருள் ஆராய்ச்சி நடத்தவுள்ளது. இந்த வயல் நிலங்களில் நீங்கள் பயிர்ச்செய் கை பண்ணமுடியாது என எச்சரித்ததுடன், தடுத்தும் வருகின்றார்.

இதனால் மிக நீண்ட காலமாக வயல் விதைப்புச் செய்துவரும் சுமார் 140 குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்தை இழக்கும் நிலையும், காணிகளைப் பறிகொடுக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினையை உடன் தீர்த்து வைக்குமாறு கோருகின்றோம் - என்றுள்ளது. (ளி)

# அம்பாறை ஊடகவியலாளர்களுக்கு தொடர்கின்றன அச்சுறுத்தல்கள்

அம்பாறை,ஏப்.9

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களுக்கு அரசியல்வாதிகள், அடியாட்கள், குண்டர்கள் எனப் பல்வேறு தரப்பினராலும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் மகாராஜா நிறுவன (எம்.ரீ.வி., சக்தி, சிரச) தொலைக்காட்சிச் சேவைகளின் நிருபராகவும், அரசியல் களநிலவரக் கட்டுரையாசிரியராகவும் பணியாற்றும் எம்.ஐ.அஹமட் அலி றஜாய்க்கு அவரது பணியைச் செய்யக்கூடாது என மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இது தவிர, ஊடகவியலாளர்களான ஜெஸ்மி, எம்.மூஸா, எம்.ரி.ஏ.கபூர், ஏ.எல்.றபீக் பிர்தௌஸ், எம்.றிபாஸ் ஆகியோர்களுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சம்பவங்களை அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ளி)




# விஞ்ஞானத்துறை பற்றிய அச்சம் மாணவர்களிடம் ஏற்படக்கூடாது

## சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் கருத்து

அம்பாறை,ஏப்.9

'ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் சேர்ந்து மாணவர்கள் கல்வி பயில தீர்மானிக்கும்போது சில கலை, வர்த்தகப் பட்டதாரிகள், மாணவர்களுக்கு விஞ்ஞானத்துறை பற்றிப் பயமுறுத்தி அவர்களை அதிலிருந்து தூரமாக்கி வேறு துறைகளை நோக்கிச் செல்ல வழியமைக்கின்றனர். இதனால், இந்த நாட்டின் கல்வி இன்னுமொருபடி கீழ நோக்கியே செல்லும் அபாயம் ஏற்படுகின்றது.'

- இவ்வாறு சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர் தெரிவித்தார்.

இறக்காமம் அல்-அஷ்ரப் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில், அதிபர் எஸ்.எம்.இஸ்மாயில் தலைமையில் இறக்காமம் குளக்கரை மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அங்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

மாணவர்கள் ஜீ.சீ.ஈ. உயர்தரத்தில் விஞ்ஞானப்பாடத்தைக் கற்றால் விஞ்ஞானப் பட்டதாரியாகலாம். வைத்தியர்களை உருவாக்குபவர்கள் விஞ்ஞானப் பட்டதாரிகளாவர். விஞ்ஞானம் கற்றுப் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கான வாய்ப்பை இழந்தவர்கள் வேறு பல துறைகளுக்கு இலகுவாகச் செல்லலாம்.

இன்று நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டி மிகவும் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. ஆசிரியர்களும், மாணவர்களும் மிகவும் உற்சாகத்துடன் தமது கடமைகளில் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்குப் பாடசாலை அதிபரின் சிறந்த நிர்வாக முறையே முக்கிய காரணம் எனலாம். பாடசாலையின் எந்தவொரு நிகழ்வுக்கும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும் - என்றார். (ளி)

# மட்டு. மாவட்ட மௌலவி ஆசிரியர்க்கு இரண்டு நாள் பயிற்சிச் செயலமர்வு

மட்டக்களப்பு,ஏப்.9

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் மௌலவி ஆசிரியர்களுக்கு மத்திய கல்வியமைச்சின் ஏற்பாட்டில் இரண்டு நாள் பயிற்சிச் செயலமர்வு நடத்தப்பட்டுள்ளது.

கல்வியமைச்சினால் புதிதாக அண்மையில், நியமனம் செய்யப்பட்ட மௌலவி ஆசிரியர்கள் உட்பட சுமார் 80 ஆசிரியர்கள் அந்தச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

அரசினால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகள், இஸ்லாம் பாடத் திட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. புதிய பாடவிதானம் மற்றும் விழுமியக்கல்விச் செயற்பாடுகள் பற்றி ஆசிரியர்களுக்கு விரிவுரைகள் வழங்கப்பட்டன என வலயக் கல்விப் பணிப்பாளர் யு.எல்.எம்.ஜெயினுதீன் தெரிவித்தார்.

மத்திய கல்வியமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.அகமட்லெவ்வை பிரதம விரிவுரையாளராகக் கலந்து கொண்டு இந்தச் செயலமர்வை நடத்தினார்.

பாடரீதியான கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் கல்வியமைச்சு அதிகாரிகள் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

ஏறாவூர் அலிஹார் தேசியப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் இஸ்லாம் பாடத்தில் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரிப்பதற்கான விஷேட வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவது பற்றியும் ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ளி)

# ஹற்றனில் வீதி விபத்து: மூன்று பேர் படுகாயம்!

கண்டி,ஏப்.9

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் ஸ்ரேண்டன் பிரதேசத்தில் ஓட்டோ ஒன்றும், 'கப்' ரக வாகனமும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஓட்டோ சாரதி உட்பட மூவர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களின் நிலை அபாயக் கட்டத்தில் இருப்பதாகவும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டவளை ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் இந்த வாலிபர்களும், ஓட்டோ சாரதியும் வட்டவளை அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஆபத்தான நிலையில் இருந்த வாலிபர்கள் உடனடியாக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட 'கப்' ரக வாகனச் சாரதி கைது செய்யப்பட்டார். அத்துடன் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜராக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஹற்றன் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ளி)

# கேகாலை - ரம்புக்கனை புராதன பாலம் புனரமைப்பு

கண்டி,ஏப்.9

ரம்புக்கனை நகரை ஒட்டிய இடத்தில் அமைந்துள்ள மஹாஓயாவின் குறுக்கே ஆங்கிலேயர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஹிரிவடுன்ன பாலம் தற்போது துரிதமாக புதுநிர்மாணம் பெற்று வருகிறது.

ரம்புக்கனையையும் - கேகாலையையும் இணைக்கும் இப்பாலத்தினூடாகவே இலங்கையின் பிரசித்தி பெற்ற இடமான பின்னவல யானைகள் சரணாலயத்திற்குச் செல்ல முடிகிறது.

தற்போதிருக்கும் பழையபாலம் தொடர்ந்தும் இருக்கும் வகையில் புதிய பாலம் அமைக்கப்படுகிறது.

ரம்புக்கனைத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும், தற்போது சப்ரகமுவ மாகாண முதலமைச்சருமான மறிபால ஹேரத்தின் முயற்சியினாலேயே 410 அடி நீளமான இப்பாலம் 700 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படுகிறது.

இதேவேளை, ரம்புக்கனை, கேகாலை வீதி அகலமாக்கப்பட்டு றப்பர் தாரிடப்பட்ட காபட் வீதியாகவும் அமைக்கப்பட்டு வருகிறது. (ளி)

# ரூ.18 லட்சம் திருட்டுப்பொருளுடன் பிபிலையில் சிப்பாய் ஒருவர் கைது

கண்டி,ஏப்.9

சீதுவ, கட்டுநாயக்க உட்பட பல பிரதேசங்களில் 25 இற்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்துத் திருடினார் எனக் கைது செய்யப்பட்டதுடன், கொள்ளையிடப்பட்ட பொருள்களில் சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியானவை மீட்கப்பட்டுள்ளன என சீதுவை பொலிஸார் தெரிவித் தார்.

சீதுவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காமினி ரத்நாயக்கவுக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் அவரது தலைமையில் சென்ற பொலிஸ் குழு பிபிலை பிரதேசத்துக்குச் சென்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பிபிலை பிரதேசவாசியெனவும் அங்கு அமன்தொலுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்தவாறே இத்தகைய கொள்ளைகளை நடத்தியுள்ளார் எனவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

சந்தேகத்துக்கிடமான ஏராளமான தொலைபேசி இலக்கங்களைப் பின்பற்றியே இந்நபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர். இவரிடமிருந்து திருடப்பட்ட 36 கையடக்கத் தொலைபேசிகள், தங்க நகைகள் உட்பட பெறுமதியான பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் சீதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

# 'சகலருக்கும் மின்சாரம்' திட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்துக்கு ரூ.470 கோடி நிதி

## முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ தெரிவிப்பு

கண்டி,ஏப்.9

'சகலருக்கும் மின்சாரம்' என்ற திட்டத்தின் கீழ் எனது வேண்டுகோளின் பேரில், ஊவா மாகாணத்திற்கென அரசு 470 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்யவுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது - என்று ஊவா மாகாண முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.




மொனராகலை மாவட்டத்திற்கான முதலாவது மகளிர் கல்லூரி அண்மையில் முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட பின் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் முதலமைச்சர் விஜயமுனி சொய்சாவினால் சுமார் 11 கோடி ரூபா செலவு மதிப்பீட்டில் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதன் முதற்கட்டப் பணிகள் பூர்த்தியான நிலையில் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்த வித்தியாலயத்தில் தரம் 6 முதல் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். முதற்கட்டமாகச் சிங்கள மொழி மூல வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பின்னர் தமிழ், சிங்கள மொழி மூல வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தற்போது அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இந்த நோக்கத்தை எட்டுவதற்காகவே இவ்வாறான புதிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் நாடு பொருளாதார ரீதியில் சிறந்த இடத்தை எட்டும் - என்றார். (ளி)

## வெடிபொருள்கள் கொத்மலையில் மீட்பு

கண்டி, ஏப்.9

தலவாக்கலை; கொத்மலை, ரம்புகுவத்தைப் பகுதியில் கடந்தசெவ்வாய்க்கிழமை மாலை வெடிபொருள்கள் மீட்கப்பட்டன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

டெட்டனெட்டர்கள், ஒருதொகை பட்டாசுகள், இரண்டு எரிபொருள் போத்தல்கள், வெடிமருந்துகள், வயர்கள் என்பன மீட்கப்பட்டன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (ளி)

# கேகாலை, மாவனல்லை பிரதேசங்களில் வாசனைத் திரவியங்களுக்கு கூடிய விலை

கண்டி,ஏப்.9

கேகாலை, மாவனல்லை நகங்களில் வாசனைத் திரவியங்களுக்கு நல்ல கிராக்கி நிலவுகிறது. இதனால் கராம்பு, மிளகு, ஏலம் சாதிக்காய் ஆகியவற்றை உற்பத்தி செய்வோர் கூடிய விலை பெறுவதுடன், நல்ல வருமானமும் பெற்று வருகின்றனர்.

அதேவேளை, கொழும்பிலுள்ள வாசனைப் பொருள் ஏற்றுமதியாளர்கள் பலரும் உற்பத்திப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று அதிகவிலை கொடுத்துக் கொள்வனவு செய்தும் வருகின்றனர்.

மேலும், மாவனல்லைப் பகுதியிலுள்ள பெண்கள் பலரும் கராம்பு, மிளகு என்பவற்றை உலரவைத்து பணம் சம்பாதித்தும் வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சாரல் 38

## SPECIAL GUIDE FOR 2010 A/L ARTS STUDENTS

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## தமிழ்மொழி - 01 | பகுதி - II

03. ''மானம்'' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை தெளிவுறுத்துக.
அ. உயர்ந்தோர் தாம் தாழ்வதற்கு காரணமான செயல்களை செய்யாமையின் சிறப்பு.
ஆ. வறுமை ஏற்பட்டாலும் மானமுடையவரின் இயல்பு மாறாமை.
இ. மானத்திற்காக உயிரை விடலில் சிறப்பு.

04. பரதன் இராமனை அரசேற்க வேண்டுவதையும் அவ்வேண்டுகோளை இராமன் மறுத்துரைப்பதையும் தொடுத்துக் கூறி, அவ்வுரையாடலூடாக வெளிப்படும் பரதனின் குணவியல்புகளை மதிப்பிடுக.

05. இராஜநாயகம் கருபத்துல்லாவிற் குறுபான் கொடுத்த படலத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விவரிக்குக.
அ. கருபத்துல்லா தன் வாய்திறந்து அழுதமைக்கான காரணங்கள்.
ஆ. அதற்கு ஆறுதல் தரும் வகையில் இறைவன் அளித்த பதில்.
இ. சுலைமான் நபி மக்கமா நகரில் இறங்கி ஆற்றிய பணிகள்.

06. நாச்சியார் திருமொழியை ஆதாரமாகக்கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ. திருமண நடைமுறைகள்.
ஆ. திருமால் பெருமை.
இ. ஆண்டாளின் பக்திச் சிறப்பு.

07. நாகம்மாள் நாவலில் சித்திரிக்கப்படும் ''நாகம்மாள்'' என்ற கதாபாத்திரத்தின் குண வியல்புகளை அப்பாத்திரத்தின் வாயிலாக பெறத்தக்க படிப்பினைகளையும் தெளிவுறுத்துக.

08. ''உயிர்பெற்ற தமிழர்பாட்டு'' என்ற பாரதியின் கவிதையை அடிப்படையாகக் கொண்டு,
அ. சாதி அடிப்படையிலான உயர்வு, தாழ்வு பற்றிய பாரதியின் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.
ஆ. புராணங்கள் பற்றிய பாரதியின் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.
இ. ஸ்மிருதிகள் பற்றிய பாரதி கூறுவனவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.
ஈ. தவம், யோகம், யாகம், ஞானம் ஆகியவை பற்றிப் பாரதி கூறும் புதிய கருத்துக் களைத் துலக்குக.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விவரிக்குக.
அ. 'சிலப்பதிகார வழக்குரை காதை' யிலே கோப்பெருந்தேவி கண்ட தீக்கனாக்கள்.
ஆ. புதுமைப் பெண்ணிடத்துப் பாரதி காண விழைந்த குணங்கள் யாவை?
இ. 'தொழில்' என்ற கவிதையில் கைத்தொழிலாளர், உழவர், கலைஞர், விஞ் ஞானிகள் ஆகியோரை விளித்து, அவர்களைப் பாரதி போற்றிப்புகழும் விதம்.
ஈ. ''இளையோர் சூடார்'' எனத்தொடங்கும் புறநானூற்றுச் செய்யுளில் சாத் தானின் பெருமை சித்திரிக்கப்படுமாறு.
உ. பிச்சமூர்த்தியின் ''பெட்டிக்கடை நாரணன்'' பாடலிலே காணப்படும் சிறப்புக்கள்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## தமிழ்மொழி - 01 | பகுதி - I

01. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 - 400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
அ. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் தமிழ்ப்பணிகள்.
ஆ. சூழல் மாசடைதல்.
இ. இலக்கியக் கல்வியின் தேவை.
ஈ. விஞ்ஞானமும் சமூகமும்.
உ. திரைப்படப் பாடல்கள்.
ஊ. ''மெய்ப்பொருள் காண்பதறிவு''

02. பின்வரும் (அ) உரைப்பகுதியையும் (ஆ) செய்யுளையும் படித்து, அவை ஒவ் வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.
அ. ''மொழி கற்கும் பணியில், மாணவர்க்குக் கல்வி புகட்டும் கருவியாக, உடனு ழைக்கும் நண்பனாக, உறுதுணை புரியும் ஒரு வசதிப்பொருளாகக் கணினி இயங்குகின்றது. ''சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழ் நாப்பழக்கம் வைத்த தொரு கல்வி மனப்பழக்கம்'' என்று பாடினார் ஔவையார். மொழிக் கல்வியில் இடம்பெறும் இப்பழக்கத்தை - பயிற்சியை - நல்குவதற்குக் கணினி உதவு கின்றது. மொழியமைப்பின் கூறு ஒன்றினை மாணவனுக்கு அறிமுகப்படுத்திப் பின்னர் அக்கூறு பற்றி அவன் நன்கு விளங்கிக் கொள்ளவும் அதனைப் பயன் படுத்திக் கையாளும் ஆற்றலைப் பெறவும் மொழிப்பயிற்சி என்பது தேவைப் படுகின்றது. இந்நோக்கங்களை நிறைவேற்றும் குறிக்கோளுடன் பயிற்சி வினாக்கள் அமைக்கப்படுகின்றன. இவ் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டியது மாணவன் பணியாகும். இத்தகைய பயிற்சி வினாக்களைச் சிறப் பான முறையில் திட்டமிட்டுத் தயாரித்துக் கணினிவழிக் கொடுக்கலாம். மாணவன் செய்யவேண்டிய கட்டளைக் குறிப்புக்களையும் இதன்வழி தரலாம். இவற்றை நோக்கிய மாணவன் இவற்றிற்கேற்ப விடையளிக்கிறான். உடனே மாணவன் தன் விடைகள் சரியா, தவறா எனக் கணினிவழி அறிகிறான்.

சரி என்றால் பாராட்டையும், தவறு என்றால் திரும்பச் செய்வதற்குரிய தூண்டுதலையும் அவன் கணினிவழிப் பெறுகிறான். திரும்பத் திரும்பத் தவறு செய்தால் சரியான விடையையும் அவன் விரும்பினால் கணினியில் பெறமுடியும். இவ்வாறு மொழி கற்கும் மாணவனுக்கு மொழிப்பயிற்சி நல்கும் ஒரு தனிப்பாட ஆசிரியனாக, அதாவது கல்வி புகட்டும் கருவியாகக் கணினி திகழ்கிறது. இந்நிலையில் தமிழ் இலக்கண கூறுகளை உள்ளடக்கிய பயிற்சி களை மாணவன் கணினி வழிப்பெற வழிவகுக்கலாம். இதற்கான பாட நிரல் களை நாம் முன்கூட்டியே தயாரிக்க வேண்டும்.''
1) இப்பகுதியில் ஆசிரியர் கூறியுள்ளவற்றை உமது நடையில் 30 சொற் களுள் சுருக்கித் தருக.
2) மொழி கற்கும் மாணவனுக்குக் கணினி எவ்வாறு உதவுகின்றது?
3) மொழிப் பயிற்சியின் தேவை என்ன?

ஆ. பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்
வானூர் மதியம் போல் வைகலும் - தேயுமே
தானே சிறியார் தொடர்பு.
1) பாடலின் பொருளை 30 சொற்களில் விரித்து எழுதுக.
2) பாடலின் பிரதான கருத்து யாது?

03. பின்வரும் பதினைந்து வினாக்களும் அ, ஆ, இ என மூன்று பகுதிகளாகத் தரப் பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிந்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
அ. 01) பின்வரும் சொற்களில் 'க' இருவேறு விதமாக உச்சரிக்கப்படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டுக்கு ஏற்ப அச்சொற்களை வகைப்படுத்துக.
கட்டில், பகல், பற்கள், மகன், பக்கம், நகம்.
02) சென்றேன், விட்டேன், பாய்ந்தேன், கற்றேன் ஆகியவற்றுள் உடனிலை மெய்மயக்கம் இடம்பெற்றுள்ள சொற்களைத் தருக.
03) பின்வரும் வினை அடிகளில் செயற்படு பொருள் குன்றாத வினையடி களை இனங்காண்க.
நடு, தேடு, எடு, நட, அழு, பாடு, சிரி, கொடு.
04) உருத்திகழும் காலம், புத்தியில்லாதவன், உள்ள மிளகாயா? இவற்றினை இரண்டு பொருள் தரக்கூடியதாகப் பிரித்துக் காட்டுக.
05) வேரல், ஊறல், ஏறல், சாரல் - இவற்றுள் தொழிற்பெயர் விகுதிகள் இடம் பெறும் சொற்களை எழுதுக.
ஆ. 06) சித்திரித்தனன், செய்தான், முஃபீது என்பவற்றை சந்தி பிரித்து எழுதுக.
07) ஈரம், ஈர்த்தல், ஈரல், ஈரற்பெரியகுளம் - இவை எவ்வகைப் பெயர்கள்.
08) பொரி கடலை, பால் நிலா, சேர சோழ பாண்டியன், கருங்குதிரை, செந் தாமரை - இவை என்ன தொகை எனக் குறிப்பிடுக?
09) பக்தி, பத்தி, சக்தி, சத்தி ஆகிய சொற்களின் பொருள் வேறுபாடு புலப் படும் வகையில் வாக்கியங்கள் ஆக்குக.
10) வந்தேன், வருவேன், வரவில்லை ஆகிய சொற்களில் வா என்ற அடிச் சொல் எவ்வாறு திரிபடைந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுக.
இ. 11) வால் வீசினான், என் வீடு, நீர்ப்பறவை - இவை எத்தனையாம் வேற்றுமை?
12) மரவேலி என்பதனை நான்கு பொருள்பட விளக்கிக் காட்டுக.
13) பின்வரும் வாக்கியத்தில் உள்ள நிபந்தனை வினையெச்சத்தைக் காட்டுக.
நிர்மலாநந்தரின் சரீரத்தைச் சுமக்க முடியாவிட்டாலும் தொட்டுக்கொண்டு தள்ளாடி நடந்து வந்தார்.
14) எங்கள் ஊரில் ஒவ்வொரு கோயில்களிலும் திருவிழா நடந்தன - இவ் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
15) காலஞ்சென்ற கந்தசாமியின் அப்பாவை எனக்குத் தெரியாது - இவ் வாக்கியத்தின் பொருள் மயக்கத்தைச் சுட்டிக்காட்டுக.

## பகுதி - II

04. அ. சங்ககால அகத்தினைப் பாடல்கள் காட்டும் முக்கிய பண்புகளை துலக்குக.
ஆ. சங்கமருவிய காலத்தில் தோன்றிய அறநூல்கள் யாவை?

05. அ. சோழப் பெருமன்னர் கால இலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ. சோழர் கால அரசியல் நிலை எவ்வாறு காணப்பட்டது.

06. அ. பல்லவர் கால பக்தி இலக்கியங்களின் பண்புகளை ஆராய்க.
ஆ. பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்கள் ஏராளமாக தோன்றுவதற்கான காரணங்களை விளக்குக.

## பகுதி - III

07. 19 ஆம் நூற்றாண்டின் இலக்கியப் பண்பும் சூழ்நிலையும் எவ்வாறு இருந்தது?

08. 1980 இற்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட சமூக அரசியல் பிரச்சினைகள் இலங் கைத் தமிழ்க்கதையில் ஏற்படுத்திய செல்வாக்கினைப் பரிசீலிக்குக.

09. பின்வருவோருள் யாரேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக் கியத்துவத்தினை விளக்குக.
அ. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.
ஆ. மாதகல் மயில்வாகனப் புலவர்.
இ. நீலாவணன்.
ஈ. சோமசுந்தரப்புலவர்.
உ. அறிஞர் சித்திலெப்பை.

(விடைகள் அடுத்த வாரம் வெளியிடப்படும்)

தொகுப்பு:- சுபித்தா பரமேஸ்வரன்,
கொ/அல்-அஷ்ரப் முஸ்லிம் மகா வித்தியாலயம்,
கொழும்பு.

2010 உயர்தர மாணவர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர அளவையியல்: கற்றல் குறிப்புக்கள்

கடந்தவார (30.03.2010) தொடர்ச்சி.....

## கொப்பனிக்கஸ் (1473 - 1543)

இவர் போலந்து நாட்டைச் சேர்ந்த தலைசிறந்த வானியல் அறிஞர். சட்டம், மருத்துவம், கிறிஸ்தவ சமய சட்டவியல், வானியல் ஆகிய துறைகளிலே தமது இளமைக் காலக் கல்வியைக் கற்றார். கொப்பனிக்கஸ், பூமியும் ஏனைய கோள்களும் சூரியனைச் சுற்றிவருகின்றன எனக்கூறிய கருத்தால் கவரப்பட்டு அதனைப்பற்றி பல ஆண்டுகளாக ஆராய்ச்சிகளையும், பரிசோதனைகளையும், அவதானிப்புகளையும் மேற்கொண்டு தனது புகழ்பெற்ற நூலகிய "விண்மண்டலச் சுலற்சி" (ON THE REVOLU -TION OF THE CELESTIAL SPHERES) என்பதை எழுதினார். இதில் அவர் சூரியமையக் கொள்கையை விளக்கியதுடன் அதற்குரிய சான்றுக்ளையும் தெளிவாகக் காட்டினார். சூரியனே நடுநிலையாகவும், பூமி என்பது ஒரு கோளாக அந்தச் சூரியனைச் சுற்றி ஓடி வருவதாகவும் உள்ள பிரபஞ்சம் ஒன்றின் பொதுதோற்றம் ஒன்றை கொப்பனிக்கஸ் கூறினார். பருவங்கள் ஏற்படக் காரணம் என்ன என்று விளக்கினார். இத்தாலி நாட்டில் இருந்து காண்போருக்கு வானில் நட்சத்திரங்கள் எந்தெந்த இடங்களில் இருப்பவையாகத் தோன்றுகின்றனவோ அதே இடங்களில் இருப்பவையாக எகிப்து நாட்டில் உள்ளவர்களுக்குத் தோன்றுவதில்லை என்றார். பூமியின் தென்கோளத்திலிருந்து காணக்கூடிய நட்சத்திரங்களை அதன் வடகோளத்திலிருந்து நம்மால் காணமுடியாது என்றார். கப்பலின் பாய்மரக் கூம்பின் உச்சியில் ஒரு விளக்கை ஏற்றி வைத்தால் அந்தக் கப்பல் கடலில் தொலைவில் செல்லசெல்ல கரையில் இருந்து பார்ப்போருக்கு அது சிறிது சிறிதாக தாழ்ந்து வருவது போலத் தோன்றுகின்றது. கடைசியில் அந்த விளக்கு கண்ணுக்கு தெரியாமல் மறைந்து போகின்றது. நீருக்குள் அமிழ்ந்து போவது போலும் தோன்றுகின்றது. பூமி கோளவடிவமானது என்று நிரூபிப்பதற்கு இந்த விளக்கங்களை எல்லாம் பயன்படுத்தினார்.

### சூரியமையக் கொள்கை

* சூரியன் பிரபஞ்சத்தின் மத்தியில் உள்ளது. அதனைச் சுற்ற பூமியும் ஏனைய கோள்களும் இயங்குகின்றன.
* பூமி தன் அச்சில் சுழல்கின்றது. சந்திரன் பூமியைச் சுற்றி அசைகின்றது.
* இவற்றின் அசைவு வட்டவடிவமானவை என்று எடுக்கோள்களின் அடிப்படையிலேயே கொப்பனிக்கஸ் தனது சூரியமையக் கருதுகோளை தனது நூலில் விளக்கியுள்ளார்.

### இக்கொள்கையின் விளைவுகள்

1. கோள்களின் இயக்கம் குறித்து மேலும் சிறப்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சூரியமையக் கொள்கை வழிவகுத்தது.
2. தைகோடி பிறாகே தனது ஆய்வுகளை மேற்கொள்ள உதவியது.
3. கெப்லர் தனது ஆய்வுகளை மேற்கொள்ள உதவியது.
4. அரிஸ்டோட்டில் சூரியமையக் கோட்பாடு பற்றி முதலில் கூறியபோதும் அவருடைய கருத்து வெறும் ஊகமாகவே இருந்தது. ஆனால், கொப்பனிக்கஸ் கணித முறையில் நிரூபணங்களைக் காட்டி ஒரு பயன் உள்ள கோட்பாடாக மாற்றி அமைத்தார்.
5. வானியல் எதிர்வுகூறல்களை மேற்கொள்ள உதவியது.
6. வானியல் உண்மையான இக்கோட்பாட்டினைக்கொண்டு சரி பார்க்க முடிந்தது.
7. இக்கோட்பாட்டை புவிமைய கோட்பாட்டுடன் ஒப்பிட்டு அதை தவறு எனக் காட்ட முடிந்தது.

### கொப்பனிக்கஸின் கோட்பாடு புரட்சி எனப்படுவதற்குரிய காரணங்கள்

1. அண்டம் பற்றி இதுவரையிருந்த கருத்தோட்டங்கள் முழுவதையும் அடியோடு மாற்றியமைத்தது.
2. உலகுப்பற்றி இருந்த தத்துவ கண்ணோக்கினை மாற்றியமைத்தது.
3. கிறிஸ்தவ மதபீடத்தினால் தனக்கு எதிர்ப்புகள் நிகழும் என்றபோதும் தனது கருத்துக்களை துணிவுடன் வெளியிட்டார்.
4. தனது கோட்பாட்டை கணித முறை கணிப்புகளுடன் ஒரு பயனுள்ள அறிவியல் கோட்பாடாக வகுத்தமை.
5. கலிலியோ, கெப்லர், ஆகியோரின் பணிகளுக்கு முன்னுரையாக அமைந்தமை.
6. கொப்பனிக்கஸ் தனது நூலின் முன்னுரையில் கணித கோட்பாடுகளை பயன்படுத்தி முடிவுகளைப் பெறும்போது இவ்வாறான விசித்திரமான முடிவுகளைப் பெற வேண்டி ஏற்படலாம் எனக் குறிப்பிட்டுள்ளமை.

### குறைபாடு

1. இவருடைய கோட்பாட்டின் கோள்களின் இயக்கம் வட்டவடிவமானது எனக் கூறியுள்ளமையால் கணித முறைப்படி சிக்கலானதாகவும், யதார்த்தத் தன்மை குறைந்ததாகவும் காணப்படுகிறது.
2. இவருக்கு பின் எழுந்த வானியல் சிந்தனைகளின்படி இப் பிரபஞ்சத்தில் பல சூரிய மையங்கள் உண்டு என்ற கருத்து கூறப்பட்டுள்ளமை.

கலிலியோ, கொப்லர் போன்றோரின் பணிகளுக்கு கொப்பனிக்கஸின் கொள்கை முன்னுரையாக அமைந்தது. வரலாற்று ரீதியாக நோக்குவோமாயின் கொப்பனிக்ஸின் விண்மண்டலச் சுலற்சி என்ற நூலே நவீன வானியல், நவீன அறிவியலின் தோற்றுவாயாகவும் அமைந்தது என்பது மறுக்க முடியாதது.

## காள் பொப்பர் (1902 - 1994)

இவர் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் பிறந்து ஆங்கிலேய நாட்டில் வாழ்ந்த தத்துவ அறிஞர். விஞ்ஞான முறையியலாளர் கல்விமானாவார்.

வியன்னாம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற பொப்பர் 1945ஆம் ஆண்டில் லண்டன் பொருளியல் கல்விக்கூடத்தில் தத்துவம் அளவையியல் விஞ்ஞான முறை போன்றவற்றிற்கு பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

விஞ்ஞான முறையியல், விஞ்ஞான தத்துவம் ஆகிய துறைகளில் இவரது பங்களிப்பு மிகமிக அதிகமானதாகும். சமூக அரசியல் தத்துவம் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொண்டார்.

விஞ்ஞான முறையியலில் பொய்மைக்காண் தகைமை தத்துவம் என்னும் முறையினை உருவாக்கியவர். அனுபவ ரீதியான சோதனைகளின் மூலம் பொய்ப்பிக்கக் கூடிய அறிவு மட்டுமே விஞ்ஞான அறிவாக கொள்ளப்படலாம் என்பதே இத்தத்துவத்தின் சாராம்சம்.

இதன் குறியீட்டு வடிவம் பின்வருமாறு:-

(HI) எதிர்வு கூறல் I (P)
NI கருதுகோள் H
∴ NH

* பொய்ப்பித்தல் கோட்பாட்டை வெளியிட்டதுடன் விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு பின்வரும் வழிகளில் உதவினார்.
* விஞ்ஞானத்திற்கு பொருந்தக்கூடிய வரையறையை உருவாக்கினார்.
* விஞ்ஞான துறையையும், விஞ்ஞானமல்லாத துறையையும் வேறுபடுத்தினார்.
* அறிவு வளர்ச்சிக்கு கருதுகோள் அவசியம் என்பதை எடுத்துக்காட்டினார்.
* விஞ்ஞானத்தின் எதிர்வுகூறலின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டினார்.
* விலக்குவதன் மூலம் விஞ்ஞானம் முன்னேறுகிறது என எடுத்துக்காட்டினார்.
* கண்டுபிடித்ததிலும் பார்க்க பொய்ப்பித்தல் சிறந்தமை என எடுத்துக்காட்டினார்.
* திறந்த சமுதாயமும் அதன் எதிரிகளும் எனும் நூலை வெளியிட்டபோது அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இப்பரபரப்பிற்கு முக்கிய காரணம் பிளேட்டோ, கேகல், மார்க்ஸ் போன்றோரின் தத்துவங்கள் இந்நூலில் தாக்கப்பட்டிருந்தது.

## பிரான்ஸின் பேகன் (1561 - 1626)

* இவர் ஆங்கில தேசத்தைச் சேர்ந்த தத்துவ அறிஞரும் விஞ்ஞான முறையியலாளருமாவார்.
* தொகுத்தறி முறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர். இம்முறையானது பல் தனிப்பட்ட உண்மைகளை அவதானிப்பதன் மூலம் நிகழ்தகவான ஒரு முடிவினைப் பெறும் முறையாகும்.
  உ+ம்: நான் சாப்பிட்ட ஆப்பிள் பழங்கள் இனிப்பானவை. ஆகவே, ஆப்பிள் பழங்கள் எல்லாம் இனிப்பானவை.
* தொகுத்தறி முறையின் தந்தை எனப்போற்றப்புடுகின்றார்.
* இயற்கையை விளக்குவதற்கான மெய்க்குறிப்புக்கள் எனும் நூலை வெளியிட்டார்.
* இவர் ஓர் அரசியல் மெய்யியலாளராக இருந்தமையால் விஞ்ஞான வளர்ச்சியானது மனிதனுக்கு பயன்பட வேண்டும் எனவும், இதற்கு கொள்கை ரீதியான விஞ்ஞானங்களும் பிரயோக ரீதியான விளக்கங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் கூறினார். மேலும் ஒழுங்கான அறிவு வளர்ச்சிக்கு பரிசோதனை அவசியம் எனக் காட்டினார்.

## ஐன்ஸ்ரைன் (1879 - 1955)

* இவர் ஜேர்மன் தேசத்தைச் சேர்ந்த ஒரு கணித அறிஞரும், பௌதிகவியல் விஞ்ஞானியுமாவார்.
* பௌதிக துறையில் மேற்கொண்ட ஆய்விற்காக நோபல் பரிசு பெற்றார்.
* இவர் புகழ்பெற்ற சார்பு நிலைக்கொள்கையை வெளியிட்டார். பௌதிகம், இரசாயனம், விண்கோளின் இயக்கங்கள் பற்றிய பழம் கொள்கைகளை இவரது கொள்கை மாற்றியது. அத்துடன் அக்கால விஞ்ஞானிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதும், அணுகுண்டு தயாரிக்க உதவியதும் இக்கொள்கையேயாகும்.
* சடப்பொருட்களை சக்தியாகவும், சக்தியை சடப்பொருளாகவும் மாற்ற முடியும் எனக் குறிப்பிடுகிறார். இதனை எளிமையான சூத்திரத்தின் மூலம் விளக்குகின்றார். இச்சூத்திரம் பின்வருமாறு:-

  $E = MC^2$
  E = சக்தி (Energy)
  C = ஒளியின் வேகம் (Velocity of light)
  M = சடப்பொருள் துணிக்கையின் திணிவு (Mass)

  பொருட்களின் அணுக்களின் உட்கருவில் உறங்கிக்கிடக்கும் மகத்தான சக்தியினை விளக்கும் சமன்பாடு இதுவாகும். இச்சமன்பாட்டின் மூலம் பொருட்களும் சக்திகளும் ஒன்றென நிரூபித்தார். பொருள் சிதைந்தால் சக்தி. சக்தி திரண்டால் பொருள்.
* விஞ்ஞான விளக்கங்களில் காரணகாரிய விளக்கம் தவறானது எனக் குறிப்பிடுகிறார்.

## ரூடோல் கானப் (1890 - 1956)

* இவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மெய்யியலாளரும் விஞ்ஞான முறையியலாளருமாவார்.
* நிகழ்தகவு கோட்பாடு பற்றி தெளிவாக ஆராய்ந்து விளக்கினார்.
* விஞ்ஞானத்தை வகைப்படுத்தி அவற்றை கையாளும் முறைகள் பற்றி விளக்கினார்.
* இவர் தர்க்க புலனறிவாளிகளில் ஒருவர். தர்க்க புலனறிவாதக் கொள்கையை எடுத்துக் காட்டினார். விஞ்ஞானக் கூற்றுகள் அர்த்தமுடையதாக இருப்பதற்கு அவற்றிற்கு உண்மை காணப்பட வேண்டும் என்றார். உண்மை காண்பதற்கு புலனறிமுறை, தர்க்க முறை என்பன பயன்படும் என்றார்.

## டேவிட் ஹியூம் (1711 - 1776)

* இவர் ஸ்கொட்லாந்து தேசத்தைச் சேர்ந்த தத்துவ அறிஞர், பொருளியலறிஞர், வரலாற்று ஆசிரியர்.
* இவர் ஐயவாதம், புலனறிவு வாதம் என்பவற்றின் மூலம் பிரபலமானார்.
* இங்கிலாந்து வரலாறு பற்றி எழுதினார்.
* மனிதனுடைய புரிந்துணர்வு பற்றிய ஆராய்ச்சி என்பது இவரது பிரபலமான நூல்களில் ஒன்றாகும். இவர் ஒழுக்கவியலில் தற்கொலை, மனித இயல்பு என்பன தொடர்பாகவும் நூல்களை எழுதினார்.
* காரணகாரிய தத்துவ கருத்துக்கள் பிரச்சினைக்குரியவை என இவர் குறிப்பிடுகிறார். ஒரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து இன்னொரு நிகழ்ச்சி நடக்கிறது என்பதை ஹியூம் நம்புகின்றபோதிலும் இதில் முதலாவது நிகழ்ச்சி இரண்டாவது நிகழ்ச்சிக்குரிய காரணம் என்பதை நிரூபிக்க முடியாது என இவர் கூறுகிறார். இரு நிகழ்ச்சிகள் ஒன்றின் பின் ஒன்றாக அடுத்தடுத்து நிகழ்வதால் முதலாவது நிகழ்ச்சி இரண்டாவது நிகழ்ச்சிக்குரிய காரணம் என்னும் தவறான நம்பிக்கை மக்களிடையே நிலவுகின்றது என்றார்.

## இம்மானுவேல் (1724 - 1804)

* இவர் குருசியா நாட்டைச் சேர்ந்த மெய்யியலாளராவார்.
* இயற்கை மெய்யியல் சார்பாக இவரது ஆய்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றது.
* இவர் டேக்காட் போன்ற அறிவு முதல் வாதிகளின் கருத்தையும் ஹியூம் போன்ற அனுபவ வாதிகளின் கருத்தையும் ஆராய்ந்து தூய அறிவு வாத கருத்தை முன்வைத்தார்.
* இயற்கை பொது வரலாறும் விண்கலங்களின் தோற்றம், தூய அறிவின் விமர்சனம் போன்ற நூல்களை வெளியிட்டார்.
* 1775 இல் வான் பற்றிய பொதுக் கொள்கை எனும் நூலில் ஞாயிற்றுத்தொகுதியின் கூர்ப்புக் கொள்கையை வெளியிட்டவர்.

## ஜே.எஸ்.மில் (1806 - 1873)

* இவர் ஆங்கிலேய தேசத்தைச் சேர்ந்த அளவியியல் அறிஞரும், விஞ்ஞான முறையியலாளரும் ஆவார்.
* உய்த்தறி அளவியியல், தொகுத்தறி அளவையியல் ஆகிய இரண்டையும் ஆராய்ந்து அவற்றின் அவசியத்தை வலியுறுத்தியவர். தொகுத்தறி அளவையியலிலே இவரது பங்கு அதிகமானதாகும். பொது எடுப்புக்களை கண்டறிவதும் அவற்றை நிறுவிக்காட்டுவதுமே தொகுத்தறி முறை என்கிறார்.
* இவரது கருத்தின்படி நிகழ்வுகளுக்கிடையே உள்ள காரணகாரிய தொடர்பை அறிவதே விஞ்ஞானத்தின் நோக்கமாகும். எனவேதான் விஞ்ஞான விளக்கங்கள் யாவும் காரணகாரிய விளக்கம் எனக்கூறப்படுகின்றது. காரணம் பற்றி கருத்து இரு வகைப்படும்.
  1) அண்மைக்காரணம். 2) தொலைவுக்காரணம்.
* உ+ம்: ABCD என்ற தொடரில் D என்பது முன்நிகழ்ச்சிகளின் விளைவாகும். இதற்கு அண்மையில் இருக்கும் C அண்மைக் காரணமாகும் மற்றையவை தொலைவுக் காரணங்களாகும்.
* காரணத்தைக் கண்டுபிடிக்க அவதானம், பரிசோதனை, ஒப்புமை போன்றவை பயன்படும் எனக்கூறினார். இவரால் உருவாக்கப்பட்ட பரிசோதனை முறைகளான ஒற்றுமை முறை, வேற்றுமை முறை, எச்சமுறை என்பன விஞ்ஞான வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன.
* மில்லின் முறைகள் ஒவ்வொன்றும் தவறற்ற முறைகளாகவோ காரணத்தை அறிவதற்கான முறைகளாகவோ கொள்ள முடியாது என விமர்சிக்கப்படுகின்றது. எனினும், இவற்றை காரணகாரிய முறையை அறிவதற்கான ஆரம்ப முறையாகக் கொள்ளலாம்.

(வளரும்)

2010 உயர்தர மாணவர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் அழைக்கிறோம்

# JAFFNA International 2010 TRADE FAIR

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2010

2010 ஏப்பிரல் 18 முதல் 20 வரை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை



சித்தாரா மற்றும் பிரபல கலைஞர்களின் இசை நிகழ்ச்சி

நவநாகரிகக் காட்சி / கைத்தொழில் கருத்தரங்குகள்

முதலீட்டு அரங்கம் / விசேட உணவுகள், குடிபானங்கள் முதலியன

ORGANISED BY:

LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED

A member of SAE SOUTH ASIA network

FOR INFORMATION CONTACT:

4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mawatha, Colombo 03
Tel: 2390560-2 Fax: 2390563 E-mail: rizwan@saexhibitions.com

www.saexhibitions.com/jitf

IN ASSOCIATION WITH CCIY

JOINTLY ORGANISED BY FCCISL

SUPPORTED BY SRI LANKA CONVENTION BUREAU

SPONSOR Sri Lanka Telecom Mobitel We Care. Always.

PARTNER COUNTRY INDIA

OFFICIAL PRINT MEDIA உதயன் சுடர் ஒளி

OFFICIAL RADIO வெற்றி FM



# இழந்து விடாதீர்கள் இந்த பொன்னான சந்தர்ப்பத்தை

எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்

## வடக்கு மற்றும் கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு

நிறுவனமானது ஜின்மா டிராக்டர்களுக்கு ஏக விநியோகஸ்தர்களாவர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமது பொருள்களை விநியோகம் செய்வதற்கு ஆர்வமுள்ள முகவர்களை எதிர்பார்க்கின்றது.

இலாபகரமான இந்த வர்த்தகத்துறை சந்தர்ப்பத்தை இழந்து விடாதீர்கள். வருமானத்துக்காக மட்டுமல்ல வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் சமூகங்களின் மேம்பாட்டுக்காகவும்.

ஃபார்மாக் நிறுவனமானது பீஜோட் மற்றும் மாஸ்டா வாகனங்களுக்கு ஏக முகவர்களான கார்மார்ட்வுடன் இணைந்த நிறுவனமாகும்.

FARMAC INTERNATIONAL

எமது நிறுவனத்தின் பிரதிநிதிகள்
2010 ஏப்ரல் 9 ஆம் திகதியிலிருந்து 11 ஆம் திகதி வரை
யாழ்ப்பாணத்தில் இருப்பார்கள்.

மேலதிக தகவல்களுக்கு:
திரு.கமல்நாதன்
தொ.பே: 0719433088/0772204955





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகரசபையின் நூலக சேவைகள்

கல்வி வெறும் ஆடம்பரப் பொருளல்ல. கல்வியானது அன்றாட வாழ்வினை இயக்கும் உயிரியக்கமுள்ள கருவியென்றும், நூலகங்கள் வெறும் பொழுதுபோக்கிற்கானவையல்ல. அது உடலால் உழைத்தவன் உள்ளத்தில் அமைதிபெறும் மண்டபம் என்றும், பாடசாலையில் கற்றவன் தாமாக அறிவைத் தேடி அரசாசனம் ஏற்றி நாடும் ஏடும் போற்றி ஏற்றிப் பயன்பெற வைக்கும் ஊற்றிடமாகவும், ஊக்கத்தைத் தூண்டி அறிவைப் பெருக்கி, ஆராய்ச்சியை வளர்த்து, படைக்கும் ஆற்றலை மேம்பாடடைச் செய்து சிந்தனைச் செம்மல்களாகப் பலர் போற்றும் மாமேதைகளாக உருவாக்கும் பொன் நகரமே நூலகம் எனப்படும்.

உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளில் ஒன்றாக நூலாக சேவைகளை மேற்கொள்ள வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளதால் சாவகச்சேரி பட்டண சபை செயற்பட்ட காலத்தில் 1958 ஆம் ஆண்டு தற்போது பிரதான நூலகம் அமைந்துள்ள பகுதியில் ஓலைக் கொட்டில் அமைத்து பொது நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலப் பகுதியில் தினசரி வெளியாகும் வீரகேசரி, தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகள் இந் நிலையத்தில் பரிசாரகர் ஒருவரின் பொறுப்பில் வாசகர் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

சாவகச்சேரி பட்டண சபை நிர்வாகம் 1964 ஆம் ஆண்டு நகர சபையாக தரம் உயர்த்தப்பட்டதன் பின்னர் பொது நூலகத்தின் அவசியம் பற்றி உணர்ந்து 1973 ஆம் ஆண்டு கட்டடமாக அமைக்க அத்திபாரமிடப்பட்டது. ஆரம்பத்தில் 45 அடி நீளத்தில் மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தில் பத்திரிகைகள் வாசிப்புப் பகுதி, நூல் இரவல் பெறும் பகுதி, உசாத்துணைப் பகுதி ஆகியவை செயற்படக்கூடிய வசதிகளுடன் உருவாக்கப்பட்டு அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் மு.திருச்செல்வம் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகம் யாழ்.மாவட்டத்தில் இரண்டாவது பெரிய பொது நூலகமாக விளங்க அங்கிருந்த புத்தகங்களும் சேவைகளும் காரணமாக அமைந்தன. 1982 ஆண்டளவில் இந் நூலகத்தில் தேடற்கரிய பெறுமதிவாய்ந்த நூல்களுடன் சகல வசதிகளையும் கொண்டிருந்தமையால் ஒரு மத்திய நூலகமாகத் திகழ்ந்தது. இவ்வேளையில் யாழ். திறந்தவெளி பல்கலைக்கழக நிர்வாகத்தினர் இந் நூலகத்தை மாவட்டத்திலேயே கேந்திர நிலையமாகத் தெரிவுசெய்து மாணவர் வசதி கருதி 500 க்கும் மேற்பட்ட பலதுறை சார்ந்த நூல்களை வழங்கி ஒரு தனிப்பட்ட பகுதியாக இந்த நூலகத்தில் இயங்கி வந்தமை நூலக வளர்ச்சிக்குக் கிடைத்த பெருமையாகக் கருத முடிந்தது. 1985 ஆம் ஆண்டளவில் தமிழ், ஆங்கிலம் ஆகிய 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்களைக்கொண்டு இயங்கியது. இவ்வாறு பலதரப்பட்ட பல்துறை சார்ந்த நூல்களையும் பரந்த சேவையினையும் பலதரப்பட்ட நூலக ஊழியர்களுக்கு பயிற்றுவிக்கும் நிறுவனமாகவும் செயற்பட்டமையை அன்றை யாழ்.மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளராக இருந்த அன்ரன் அல்பிரட் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி அதன் சேவைக்கு தனிப் பெரும் முத்திரை குத்தியுள்ளார். அக்காலத்தில் யாழ்.மாவட்டச் செயலயத்தில் உயர் பதவிகளில் பணியாற்றியவர்கள் இந்த நூலகத்தில் அங்கத்தவர்களாக இருந்துள்ளார்கள் என்றால் இந்த நூலகத்தின் சிறந்த சேவையினை யாரும் குறை சொல்வதற்கு இல்லை.

அக்காலப் பகுதியில் 500 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களை கொண்டியங்கியது. பொது நூலகத்தில் படித்தவன், பணக்காரன், ஏழை, வசதி படைத்தவன் என்ற பாகுபாடு இல்லாமல் 14 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அங்கத்துவம் பெறக்கூடிய வகையில் ஐந்து ரூபாவாகவும், விண்ணப்பப் படிவமும் அங்கத்துவக் கட்டணம் இருபது ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

சிறந்த சேவைகளை வழங்கிவந்த சாவகச்சேரி பொது நூலகத்தின் சேவையினை பாதிக்கும் வகையில் 1987 ஆம் ஆண்டு அமைந்தது. அக்காலப் பகுதியில் வருகைதந்திருந்த இந்திய அமைதி காக்கும் படையினரின் நடவடிக்கையினால் நூலக சேவை சீர்குலைக்கப்பட்டது. நூல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ஆயிரக் கணக்கான தேடற்கரிய தமிழ், ஆங்கில நூல்கள் விஷமிகளால் நாசமாக்கப்பட்டன.

இதனால் நூலக சேவையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டது. இதனால் 1987, 1988 காலப் பகுதியில் நூலக சேவையில் பாதிப்பு ஏற்பட்ட போதிலும் இக் காலப் பகுதியில் புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டும் அன்பளிப்புகள் மூலம் கிடைத்த நூல்கள் மூலமும் வாசகர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது.1989 ஆம் ஆண்டு நூலக கட்டடம் 90 அடி நீளத்திற்கு விஸ்தரிக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்குவிடப்பட்டது.

(தொடரும்)

தொகுப்பு: ஐயந்தன்




# கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம்

சென்றவாரத் தொடர்ச்சி....

அரசாங்க கல்விக் கொள்கைக்கு அமைய 1962 ஆம் ஆண்டு பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்ட வேளையில் 1962.03.15ஆம் திகதி இவ் வித்தியாலயமும் அரசினால் சுவீகரிக்கப்பட்ட அரச பாடசாலையாக மாற்றப்பட்டது. வித்தியாலயம் அரசினால் சுவீகரிக்கப்பட்டதும் வித்தியால கல்வி வளர்ச்சியிலும் பாரிய பாதிப்பை உருவாக்கியது முதலாவது அதிபராக மு. கந் தையா பொறுப்பேற்றதும் மாணவர்களின் தொகை குறைவடைந்தது. இதனால் அந்த வருடமே ஏழாம் வகுப்பு வரை குறைந்தது. பின்னர் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள பாடசாலையாக இயங்கத் தொடங்கியது. கு.கதிர்காமசேகரர் அதிபராக இருந்த காலத்தில் 1994 ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் ஒரே தடவையில் பத்து மாணவர்கள் சித்திபெற்றுச் சாதனை படைத்தனர்.அதன் பின்னர் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் வருடாந்தம் ஓரிரு மாணவர்கள் சித்திபெறுகின்ற போதிலும் ஏனைய மாணவர்கள் பரீட்சைப் வெட்டுப் புள்ளியை அண்மித்த நிலையில் புள்ளிகளைப் பெற்று வருகின்றனர். இவ்வருடம் ஐந்தாம் தர வகுப்பில் கல்வி பயிலும் 24 மாணவர்களில் 50 வீதத்துக்கு மேலானோரை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற வைக்க வேண்டுமென அதிபரும் ஆசிரியர்களும் கங்கணங்கட்டி முனைப்புடன் கல்விச் செயற்பாட்டினை ஊக்கமெடுத்து மேற்கொண்டு வருகின்றனர்.

1925 ஆம் ஆண்டு வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட காலம் கடமையாற்றிய 12 அதிபர்களும் சிறந்த பணியினை மேற்கொண்டமை வித்தியாலய கல்வி மற்றும் பௌதிக வளங்களில் பெற்ற வளர்ச்சிச் சான்றாக அமைகிறது.

ஆரம்பகால தலைமை ஆசிரியராக சி. சுப்பிரமணியமும் அவரைத் தொடர்ந்து க. சரவணமுத்து, மு. கந்தையா ஆகியோரும் வித்தியாலயம் அரசினால் பொறுப்பேற்ற பின்னர் அதிபர்களாகத் இ. சரவணமுத்து ,க. இராசரத்தினம், ப.இராசரத்தினம்,கெ.எஸ். பொன்னைய, வ.கயிலேஸ்வரன் , க.கதிர்காமு, கு. கதிர்காமசேகரர், செ.சிவஞானம், இ.ரவீந்திரன் ஆகியோரும் கடமையாற்றியுள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் இவ் வித்தியாலய பௌதிக வளங்கள் முற்றாக சேதமடைந்தன. 2002 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் 2003 ஆம் ஆண்டு ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவனத்தினர் வித்தியாலய கட்டடங்களை புனரமைத்துக் கொடுத்தனர். அதே ஆண்டில் தென்மராட்சி கல்வி வலயத்தினர் மாகாண கல்வி அமைச்சின் பொதுக்கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் 100 அடி வகுப்பறைத் தொகுதி நிர்மானித்துக் கொடுத்தனர்.அதே வருடம் யுனிசெப் நிறுவனத்தினர் மாணவர்களின் குடிநீர் தேவைக்காக தண்ணீர் தாங்கியினை அமைத்து குழாய்களையும் பொருத்திக் கொடுத்தனர். அத்துடன் வித்தியாலய முன்னாள் அதிபரான க.கதிர்காமுவின் மகனான பேரின்பநாதன் என்பவர் வித்தியாலய கட்டடங்களுக்கு மின்னிணைப்பினை தமது செலவில் மேற்கொண்டுள்ளார். 2007 ஆம் ஆண்டு யுனிசெப் நிறுவத்தினர் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான விளையாட்டு முற்றத்தினை அமைத்துக் கொடுத்தனர். 2008 ஆம் ஆண்டு வலயக்கல்வி அலுவலகத்தினால் கணனி மூலையும் (Computer Corner) அமைக்கப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலய சித்திரப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் கோ. கைலாசநாதன் வித்தியாலயத்துக்கென வடிவமைக்கப்பட்ட இலட்சனை வடமாகாணத்திலேயே முதன்முறையாக நவீன முறையிலுள்ள இலட்சனையாக உள்ளது. ( இலட்சனை இணைக்கப்பட்டுள்ளது) ' எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்னும் வாசகத்துக்கேற்ற விதத்தில் இலட்சனை அமைக்கப்பட்டுள்ளது.

## தேவைகள்

பிரதேசத்திலுள்ள சில பாடசாலைகளில் உள்ளது போன்று இவ்வித்தியாலயத்திலும் விளையாட்டு மைதான வசதி இல்லாத போதிலும் அருகில் உள்ள தனியார் காணியில் வருடா வருடம் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகிறது. 2007ஆம் ஆண்டு நடைபெற்ற மகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் கிழ்ப்பிரிவில் வித்தியாலய மாணவன் தி. பிரகலாதன் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். மைதான வசதி இருக்குமாயின் ஏனைய மாணவர்களும் விளையாட்டுப் போட்டிகளில் வருடாவருடம் சாதனை படைப்பார்களென எதிர்பார்க்கப்பட்டது.

வித்தியாலயத்தில் கணனி கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்த வேண்டும் என்ற நோக்குடன் வலயக்கல்வி அலுவலகத்தினால் கணனி மூலை 2008 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட போதிலும் இன்று வரை கணனி மூலை கட்டடம் மூடப்பட்டுள்ளது. கணனி மூலைக்கு இதுவரை கணனிகள் வழங்கப்படாததும் ஒரு தேவையாக உள்ளது.

வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியர் இல்லாதது ஆங்கில கல்வியின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு கடமையாற்றிய ஆங்கில ஆசிரியை திருமண பந்தத்தில் இணைந்து வேலையிலிருந்து விலகிக் கொண்ட பின்னர் இதுவரை ஆங்கில ஆசிரியர் நியமிக்கப்படாமல் உள்ளது.இந்த ஆங்கில ஆசிரியரால் பயிற்றுவிக்கப்பட்ட நாடகக் குழு கடந்த வருடம் நடைபெற்ற ஆங்கில தினப்போட்டியில் வலய மட்டத்தில் முதலிடம் பெற்றது. 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வுக்கு முன்னர் வித்தியாலயத்தில் 176 மாணவர்கள் கல்வி பயின்றனர்.

கல்வயல் கிராமத்தில் இன்னமும் மக்கள் மீளக்குடியமர்வு முழுமைபெறாததால் தற்போது 96 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அதிபர் உட்பட ஐந்து ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்த ஆசிரியர்களின் சிறந்த தன்னலமற்ற சேவையினால் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான வாய்ப்பாடு மனனம், அறநெறி,திருக்குறள், தமிழ் அறிவு, எண்கணிதம் போன்ற போட்டிகளில் சாதனை படைத்து வருகின்றனர். கடந்த 2007 ஆம் ஆண்டு வலய மட்டத்தில் பிள்ளை நேயப் பாடசாலை மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக நடத்தப்பட்ட போட்டியில் வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

தென்மராட்சி வலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற

திருமதி காமலேஸ்வரி ஞானச்சந்திரன்
(Sp.Tr.Maths, B.A. PGDE Merit)

அவர்களை மனமாரப் பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

சிவபாதம் குடும்பம் (சரசாலை),
குகன் குடும்பம் (சரசாலை),
ஈஸ்வரநாதன் குடும்பம் (சரசாலை).

(சி/566614)

## விபத்தில் மூவர் காயம்

வலி.வடக்கு,ஏப்.9

மோட்டார் சைக்கிளும் சாதாரண சைக்கிளும் மோதிக் கொண்டதில் மூவர் காயங்களுக்கு உள்ளாகினார்கள்.

சுன்னாகம் மதவடியில் நேற்றுமுன்தினம் மதியம் இந்த விபத்து இடம்பெற்றது. இதில் சைக்கிளில் பயணித்த க.வேலாயுதம் என்பவர் காயங்களுடன் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகியிருந்தார்கள். காங்கேசன்துறை வீதியால் வந்த சைக்கிள் வீதியைக் கடந்து மதவடி ஒழுங்கையில் திரும்ப முற்பட்ட வேளையில் இந்த விபத்து நேர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (04-86)

## மருந்து வந்தது

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருந்துப் பெருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. இதன்மூலம் மருந்து வகைகளுக்கு போதனா வைத்தியசாலையில் நிலவி வந்த தட்டுப்பாடு நீங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (04-224)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் முதல்வர்

திருமதி யோகராணி தில்லைநாதன் (மு/பாலிநகர் மகா வித்தியாலயம், வவுனிக்குளம்) அவர்களின் பாசமிகு தாய்

### அமரர் சின்னையா இராசமணி

இந்தியாவில் 06.04.2010 செவ்வாய்க்கிழமை காலமானார். காலமெலாம் அன்பு மழை பொழிந்த தாய்க்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாகச் சூட்டி அன்னாரின் இழப்பால் துயருற்றுத் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
(96681) மு/பாலிநகர் மகா வித்தியாலயம், வவுனிக்குளம்.

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 * 12 * 1952



மறைவு 23 * 03 * 1998

### அமரர் க.பாலசுந்தரராஜா B.Sc
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)

திதி: ஏகாதசி (09.04.2010)

ஆண்டுகள் பன்னிரண்டு சென்றாலும்
நீங்காமல் இருக்கும் தங்கள் நினைவுகள்
ஆத்மா சாந்தியடைய
நான் வணங்கும் தெய்வங்களைப்
பிரார்த்திக்கின்றேன்

தம்பலத்தனை,
துன்னாலை வடக்கு. (96669) மனைவி - பாஞ்சாலி

## கொழும்புத்துறையில் மாதர் சங்கம் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

கொழும்புத்துறை மேற்கில் புதிதாக மாதர் அபிவிருத்தி சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அப்பகுதி கிராம உத்தியோகத்தர் செல்வி கமலவேணி மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இந்த மாதர் சங்கம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்துக்கென கொழும்புத்துறையில் வசிக்கும் பெண்களை உள்ளடக்கிய புதிய நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (04-224)

## கண்டனச் சுவரொட்டிகள்

வலி.வடக்கு,ஏப்.9

சாவகச்சேரியில் கொலை செய்யப்பட்ட திருச்செல்வம் கபிலநாத்தின் படுகொலையைக் கண்டித்து சோஷலிச மாணவர் சங்கம் எனும் அமைப்பினால் சுவரொட்டிகள் யாழ்.குடாநாட்டில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

இந்தச் சுவரொட்டியில் திருச்செல்வம் கபிலநாத் மாணவனை கொலை செய்த கொலைகாரர்களை உடனடியாக கைது செய் என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. (04-86)

## ஓராண்டு ஆனதோ? ....

தோற்றம் 17 * 12 * 1992



மறைவு 22 * 03 * 2009

### செல்வன்
### கணேசலிங்கம் கனகசபேசன்

பள்ளிப் பருவமதில் பறந்தோடிக்கற்று
வித்தகலையெல்லாம் விண்ணில்ப் பதித்த - எம் சபேசா
எமை விட்டுச் சென்று ஓராண்டு ஓடியதோ?
கூவி அழைத்தவுடன் கூடவே நிற்பாயே!
இயமன் அழைத்த குரல் விளையாடும் போது
உனக்கு மட்டும் கேட்டதுவோ?
எம் செல்வமே... சபேசா ...
உன் புன் சிரிப்பும் குரலொலியும்
உள்ளத்தைத் தைக்கிறதே
பாவிகள் நாம் பார்விட்டுச் செல்லுமட்டும்
மறவாது உன் நினைவு ஆறாது.

(96706)

அம்மன் வீதி, பண்டத்தரிப்பு. குடும்பத்தினர்.


மணி மாஸ்டர் நிலையங்களில்
பரிசு பெறலாமா?






இப்பண்டிகை காலத்தில் வெஸ்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பப்படும் பணத்தினை எந்தவொரு மணிமாஸ்டர் நிலையங்களிலும் பெற்றுகொண்டு பெருமதியான பரிசு!* ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.

- எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது!
- விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும்!
- ஒரு சில நிமிடங்களில் பணத்தை பெற்றுக்கொள்ளலாம்!
- பாதுகாப்பான சேவை!

மேலதிக விபரங்களுக்கு - ஜெயதாஸ் (0777 915 543)

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. * இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே

MMBL Money Master
நம்பிக்கை,நாணயம்,பாதுகாப்பான சேவை

உடனடி அழைப்பிற்கு - 011 552 99 99

யாழ்குடாவில் வெஸ்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பப்படும் பணத்தினை கீழ்வரும் MMBL மணி மாஸ்டர் நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்நகரில்
ஸ்ரீ முருகன் முகவர் தபால் நிலையம்,
குமார் முகவர் தபால் நிலையம்,
ராஜு ஸ்டோர்ஸ்,
சங்கீதா ஏஜென்சி
கதிரவன் ஜெம் சென்டர்,
சிற்றி பாமா,
DFCC வர்தன வங்கி,
சனச அபிவிருத்தி வங்கி,
டிஜிட்டல் இலக்ரோனிக்ஸ்
எக்ஸ்போ ஏவியேசன்,
யாழ்ப்பாணம் கிராமிய வங்கி,
சுண்ணாகம் நீதினி முகவர் தபால் நிலையம்,
குமரன்ஸ் குருப்,
மானிப்பாய் தினேஸ் பேக் ஹவுஸ்,
கொக்குவில் சாருஜன் கொமினிகேசன்,
சண்டிலிபாய்
R.S.கொமினிகேசன்,
சங்கானை சர்ண்யா கொமினிகேஷ்,
வட்டுக்கோட்டை வட்டு சிவன் கொமினிகேஷன்,
பண்டத்தரிப்பு பண் சிற்றி
பொலிகண்டி ஓம் சரவன பவா கொம்
சாவகச்சேரி சாவகச்சேரி கிராமிய வங்கி
நெல்லியடி நியூ அம்பிகா ஸ்டோர்ஸ்,
மணி நெட் கொம்
பருத்தித்துறை கணேசா ஏஜென்சி,
ராஜன் சைக்கிள் வேக்ஸ்
நல்லூர் சந்தியா மல்டி கோட்யாட்
ஈச்சமோட்டை லக்ஸ்சன் கொமினிகேசன்
இணுவில் விக்னா கொமினிகேசன்,
கணேசா சென்டர்
உடுப்பிட்டி உடுப்பிட்டி கிராமிய வங்கி
கோண்டாவில் அஸ்வினி மல்டி பிளாஸா
திருநெல்வேலி திருமுருகன் கொம் நெட்
காரைநகர் ஸ்ரீ முருகன்
கைதடி வசந்தா முகவர் தபால் நிலையம்
அச்சுவேலி அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரக்காலச் சட்டம் தாய்லாந்தில் பிரகடனம்

பாங்கொக், ஏப்.9

தாய்லாந்தில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக தாய்லாந்து அரசுக்கு எதிராக மேற்கொண்டுவரும் போராட்டங்களால், பிரதமர் அபிஷிட் விஜாஜிவா இந்த அவசரகால உத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் அரசுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவசரகாலச் சட்ட பிரகடனத்தின் மூலம் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்குப் படைச் சிப்பாய்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

சிவப்புச் சட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை வெளியேறுமாறு கோரி நடத்திய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று சில மணித்தியாலங்களில் அவசரகாலச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் அபிஷீட் பதவி விலகி, தேர்தல்களை நடத்தவேண்டுமென சிவப்புச் சட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரி வருகின்றனர்.

2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் தலைநகர் பாங்கொக்கில் அமுல்படுத்தப்படும் நான்காவது அவசரகாலப் பிரகடனம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் இயல்பு நிலையை ஏற் படுத்துவதே அரசின் பிரதான நோக்கம் என பிரதமர் அபிஷீட் தெரிவித்துள்ளார். தாய்லாந்து அவசர காலச் சட்டத்தின் பிரகாரம் ஐந்து பேருக்கு மேல் ஒன்றாகக் கூடினால், அவர்களை கலைப்பதற்குப் படைச் சிப்பாய்களுக்குச் சட்டரீதியான அனுமதி உண்டு.

எவ்வாறெனினும், ஆயிரக்கணக்கான அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ச்சியாகப் பாங்கொங்கில் நிலைகொண்டுள்ளனர்.

# வாய்ப் புற்றுநோயை கண்டுபிடிக்கும் பிரஷ்

வாய்ப் புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் ஒரு 'ரூத் பிரஷ்'சை அமெரிக்காவில் உள்ள ரைஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது 15 நிமிடங்களில் தகவல் கொடுத்து விடுகிறது. ரூத் பிரஷில் பொருத்தப்பட்டுள்ள நானோ பயோ சிப் தான் இந்த நோயை கண்டுபிடிக்கிறது.

இதுவரை வாய்ப் புற்றுநோயைக் கண்டுபிடிக்க மருத்துவ பரிசோதனைக் கூடத்துக்குச் சென்றுதான் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இந்தப் பரிசோதனைக்குப் பின்னர் முடிவு தெரிய சில நாள்களாகும். ஆனால், இப்போது ரூத் பிரஷ் கருவி மூலம் நடத்தப்படும் பரிசோதனையில் 15 நிமிடங்களில் முடிவு தெரிந்துவிடும்.

# இரகசிய அணு நிலையங்களைத் தடுக்க ஒபாமாவின் ஏற்பாட்டில் விசேட மாநாடு

வாஷிங்ரன், ஏப்.9

அமெரிக்காவில் நடைபெறவுள்ள அணு சக்தி உச்சி மாநாட்டில் 47 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாடு ஏப்ரல் 12 ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்தின் வரைவு சுற்றுக்கு விடப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் ஆஸ்திரேலியா, பிரேஸில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தோனேஷியா, இஸ்ரேல், இத்தாலி, ஜப்பான், மலேஷியா, மெக்சிக்கோ, நோர்வே, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், போலந்து, கொரியா, ரஷ்யா, சவூதி அரேபியா, சிங்கப்பூர், சுவிஸ்சர்லாந்து, தென்னாபிரிக்கா, ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச அணு சக்தி முகமை, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

இரகசியமாக நடத்தப்படும் அணு நிலையங்களைத் தடுத்து நிறுத்தவேண்டிய பொறுப்பு சர்வதேச சமுதாயத்துக்கு உள்ளது. அத்துடன் சட்ட விரோதமாக அணுசக்தி பொருள்கள் கடத்தப்படுவதையும் தடுக்கவேண்டியுள்ளது. இந்த இலக்குகளை எட்டும் வகையில் வரைவுத்திட்ட விதிகள் உள்ளன.

அதிக செறிவூட்டப்பட்ட அணு எரிபொருளை அணுமின் நிலையங்களில் பயன்படுத்துவதற்குப் பதிலாகக் குறைவாக செறிவூட்டப்பட்ட யுரேனியத்தில் செயற்படும் அணு உலைகளைப் பயன்படுத்துவது குறித்த பரிந்துரையை அனைத்துத் தலைவர்களும் ஏற்பார்கள் என்று தெரிகிறது.

அணு ஆயுதம் அற்ற் உலகை உருவாக்கும் நோக்கில் ஜனாதிபதி ஒபாமா இந்த மாநாட்டை கூட்டியுள்ளார். அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் உலகம் முழுவதும் ஆபத்து விளைவிக்கக்கூடிய அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒழிப்பதே இதன் நோக்கமாகும்.

# ஷார்ஜாவில் பொது இடங்களில் லுங்கி அணிந்து செல்லத் தடை

துபாய்,ஏப்.9

ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ள ஷார்ஜாவில், பொதுஇடங்களில் லுங்கி அணிந்து செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தியா, பாகிஸ்தான், மியான்மர் ஆகிய நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் லுங்கி அணிவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்த நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் பலர், ஐக்கிய அரபு எமிரேட்டில் பணி புரிகின்றனர். இவர்கள் லுங்கி அணிந்து பொது இடங்களில் நடமாடி வந்தனர்.

கடந்த வாரம் ஷார்ஜாவில் லுங்கி அணிந்து சென்ற ஆசிய நாட்டவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இதனால், ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ள தெற்காசிய நாட்டவர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

அரசிடமிருந்து முறையான அறிவிப்பு ஏதும் வராத நிலையில் லுங்கி அணிந்து சென்றவரை பொலிஸார் ஏன் கைதுசெய்ய வேண்டும் எனக் கேள்வி எழுப்பியுள்ளனர். அரபு நாடுகளைப் பொறுத்தவரை உடல் முழுக்க மறைக்கும்படியான ஆடைகளை அணிய வேண்டும்.

''கைதுசெய்யப்பட்ட நபர் லுங்கியை இருபுறமும் தைக்காமல் வேட்டியை போல அணிந்து சென்றிருப்பார். இதனால், காற்றில் லுங்கி பறக்கும்போது அவரது கால்கள் மற்றவர்கள் பார்க்கும்படியாகத் தெரிந்திருக்கும். இதனால், அவர் கைதுசெய்யப்பட்டிருக்கலாம்'' எனக் கேரள மாநிலத்தை சேர்ந்த ஸ்ரீகுமார் என்பவர் விளக்கம் அளித்துள்ளார். இதனால் அவர், வீட்டைத் தவிர வெளியிடங்களில் லுங்கி அணிவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில்

# இராமேஸ்வரம் கடலில் மர்மப் படகு; வந்தவர்கள் விடுதலைப் புலிகளா?

## பொலிஸார் தீவிர விசாரணை

இராமேஸ்வரம், ஏப். 09

இராமேஸ்வரம் அருகே கடற்பகுதியில் மர்மமான முறையில் பிளாஸ்டிக் படகு நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இலங்கையில் இருந்து இந்தப் படகில் தப்பி வந்தவர்கள் மீனவர்களா அல்லது விடுதலைப் புலிகளா என்று பொலிஸார் விசாரித்து வருகிறார்கள்.

இராமேஸ்வரம் சேரான்கோட்டை கடற்கரையில் நேற்றுமுன்தினம் அதிகாலை இலங்கையைச் சேர்ந்த ஒரு பிளாஸ்டிக் படகு நிறுத்தப்பட்டிருந்தது. இந்தப் படகில் வந்தவர்கள் படகை கடற்கரையிலேயே நிறுத்தி விட்டு தப்பி ஓடி இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. மர்மமான முறையில் கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த இந்தப் படகு குறித்து அப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் பொலிஸா ருக்கு தகவல் தெரிவித்தனர். தனிப் பிரிவுப் பொலிஸார் விரைந்து சென்று அந்தப் படகை பார்வையிட்டு சோதனை செய்தனர்.

அந்தப் படகு வெள்ளை மற்றும் பச்சை நிறத்தில் வர்ணம் பூசப்பட்டிருந்தது. படகின் முன்பகுதியில் 'எஸ்.எஸ்.கே. 0927' என்று எழுதப்பட்டிருந்தது. பக்கவாட்டில் மயில் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தது. '8410 கிராஸ் தெரு, கொழும்பு' என்றும் எழுதப்பட்டிருந்தது. மேலும் அந்தப் படகில் 2 நண்டு வலைகள், எஞ்சின் வேகத்தை அதிகரிக்கக் கூடிய 2 ரோலர் காற்றாடிகள், பாதியளவு டீசல், மண் எண்ணையுடன் 2 கான்கள் இருந்தன. 9.9 குதிரை சக்தி கொண்ட எஞ்சின் அந்தப் படகில் பொருத்தப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இதுகுறித்து புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர் கூறும்போது -



இராமேஸ்வரம் சேரான்கோட்டை கடல் பகுதியில் மர்மமான முறையில் பிளாஸ்டிக் படகு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வகை படகுகளை இலங்கை மன்னார் பகுதியில் உள்ள மீனவர்கள்தான் மீன்பிடிக்கப் பயன்படுத்துவார்கள். எனவே, இந்தப் படகில் வந்த நபர்கள் இலங்கையைச் சேர்ந்த மீனவர்களா? அல்லது அவர்களது படகைக் கடத்திக் கொண்டுவந்து வேறு யாராவது தப்பிச் சென்று இருக்கலாமா என்பது குறித்து தீவிரமாக விசாரித்து வருகிறோம். இதையொட்டி இராமேஸ்வரம் பஸ் நிலையம் மற்றும் ரயில் நிலைய பகுதிகளில் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தி உள்ளோம் என்று தெரிவித்தார்.

# சந்திரனில் சுரங்கப்பாதை

## இஸ்ரோ தகவல்

பெங்களூர், ஏப். 09

சந்திரனின் வெளிபரப்பின் கீழ்ப் பகுதியில் சுரங்க வழிப்பாதை காணப்படுகிறது என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய உயர் அதிகாரி தெரிவித்தார்.

அகமதாபாத்தில் உள்ள இந்திய விண்வெளிமைய இயக்குநர் டாக்டர் ரங்கநாத் ஆர்.நவல்குந்த், இதுகுறித்து பெங்களூரில் கூறியவை வருமாறு -

சந்திராயன்-1 விண்கலம் அனுப்பியிருந்த புகைப்படங்களில் சில விநோதத் தகவல்கள் கிடைத்துள்ளன. அதில் ஒரு புகைப்படத்தில் சந்திரனின் வெளிப்பரப்பின் கீழ் பகுதியில் சுரங்கம் போன்ற வழி காணப்படுகிறது. அதன்மூலம் ஒருவர் செல்ல முடியும் - என்றார்.

இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் கூறுகையில் -

சந்திரனுக்கு மனிதனை அனுப்புவது தொடர்பாக பல்வேறு தகவல்கள் பத்திரிகைகளில் வெளியாகின்றன. அவர் இஸ்ரோ விஞ்ஞானியா, அல்லது பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவரா என்று விவாதிக்கப்படுகிறது. இதுபற்றி இஸ்ரோ இன்னும் முடிவு செய்யவில்லை. மொத்தத்தில் இளைஞர் ஒருவர் அனுப்பப்படுவார் - என்றார்.

இந்தியச் செய்திகள்

# இளையராஜாவுக்கு பத்மபூஷண் விருது

புதுடில்லியில் கடந்த புதன்கிழமை விமரிசையாக நடைபெற்ற பத்ம விருதுகள் வழங்கும் விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த மிருதங்க வித்துவான் உமையாள்புரம் கே.சிவராமனுக்கு பத்ம விபூஷண் விருதும், பிரபல இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு பத்ம பூஷண் விருதும் வழங்கப்பட்டது.

பத்ம விபூஷண் நாட்டின் இரண்டாவது உயரிய விருதாகும். பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் குடியரசுத் துணைத் தலைவர் ஹமீது அன்சாரி, பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

இந்தியாவின் பல்வேறு மொழிகளில் என 900 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசை அமைத்தவர் இளையராஜா. இவர் இந்தியா மட்டுமல்லாமல் வெளி



நாடுகளிலும் பிரபலமடைந்தவர்.

எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, டி.வி.எஸ். நிறுவனத் தலைவர் வேணு சீனிவாசன் (பத்ம ஸ்ரீ), ஒய்.ஜி.ராஜலட்சுமி பார்த்தசாரதி (பத்ம ஸ்ரீ), கணக்குத் தணிக்கையாளர் டி.என்.மனோகரன் (பத்ம ஸ்ரீ) ஆகியோர் விருது பெற்ற தமிழகத்தைச் சேர்ந்தவர்களில் அடங்குவர்.

தமிழகத்தைச் சேர்ந்த கார் பந்தய வீரர் நாராயண் கார்த்திகேயனுக்கும் பத்ம ஸ்ரீ விருதை பிரதி[illegible] வித்தார்.

# தொடர்கிறது நக்ஸலின் கைவரிசை பொலிஸ் படை முகாம் மீது தாக்கு!

ராய்ப்பூர், ஏப். 09

சட்டீஸ்கரில் உள்ள மத்திய ரிசர்வ் பொலிஸ் படை முகாம் மீது நேற்றுமுன் தினமிரவு நக்ஸலைட்டுகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சட்டீஸ்கரில் கடந்த செவ்வாயன்று மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் மீது ஆயிரத்திற்கு மேற்பட்ட நக்ஸலைட்டுகள் தாக்குதல் நடத்தியதில் 76 பேர் பலியாகினர்.

இந்தக் தாக்குதலையடுத்து, இப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இருந்தாலும், இதைப் பற்றி கவலைப்படா[illegible] தினமிரவு தந்தேவாடா [illegible]லம்பள்ளி கிராமத்தில் உள்ள மத்திய ரிசர்வ் பொலிஸ் படை முகாம் மீது நக்ஸலைட்டுகள், துப்பாக்கியால் சுட்டனர். ரிசர்வ் பொலிஸ் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து நக்ஸலைட்டுகள் தப்பி ஓடி விட்டனர். இருப்பினும், இந்தத் தாக்குதலில் யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இதுகுறித்து சட்டீஸ்கர் பொலிஸ் டி.ஜி.பி.விஸ்வ ரஞ்சன் கூறுகையில் -

இது ஒன்றும் பெரிய அளவிலான தாக்குதல்இல்லை. நக்ஸலைட்டுகள் அவ்வப் போது தாக்குதல் நடத்துவதைப் போல இந்தத் தாக்குதலையும் நடத்தியுள்ளனர் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2 ஆவது பிறந்த தின அழைப்பு

இன்று (09.04.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல்
4 மணியளவில் எமது செல்வப் புதல்வி

**ர.தேஜஸ்வினி**

இரண்டாவது பிறந்த நாளை
தனது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து
செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.




**தங்கள் நல்வரவை நாடும்:**
**பி.ரகுராமசர்மா - ஜசிந்தா தம்பதிகள்**
நாச்சிமார் கோயிலடி, பழைய வீதி, கோப்பாய்.

## வர்த்தகர் சங்கத் தலைவர் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணம்

வேலணை வர்த்தகர் சங்கத் தலைவர் வே. திருநாவுக்கரசு (வயது 76) கிணற்றில் தவறிவீழ்ந்து மரணமானார்.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வங்களாவடியில் இருந்து இரவு வீடு திரும்பியவர் கிணற்றடிக்குச் சென்று தண்ணீர் அள்ளும் போது தவறி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள சடலத்தை நேற்றுப் பார்வையிட்ட ஊர்காவற்றுறை நீதிவான் எஸ். வசந்தசேனன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

(ஒ-1)

## அறிவித்தல்

08.04.2010 வியாழக்கிழமையும் 09.04.2010 வெள்ளிக்கிழமையும் மகேஸ்வரி நிதியத்தில் மணல் அனுமதி பெறவேண்டிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கான (சண்டிலிப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி) பயனாளிகள் 10.04.2010 (சனிக்கிழமை) பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

த.றஜீவ், செயற்றிட்ட இணைப்பாளர், மகேஸ்வரி நிதியம், யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **வினாசி தேவராசா**

(09.04.2010)

மண்ணில் 15.04.1951 | விண்ணில் 09.04.2009



பாசத்தின் உறைவிடமே!
பண்பின் ஒளிவிளக்கே!
அறிவின் இருப்பிடமே!
ஆண்டு ஒன்றாகியும்
ஆறவில்லை எம்மனம்
போகும் இடமெல்லாம்
உங்கள் விம்பம்
கேட்கும் ஒலிகள் எல்லாம்
உங்கள் குரல்
ஆறுதல் கிடைக்காமல்
தவிக்கின்றோம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவலைகள்

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (96714)

**என்றும் நினைவுடன்:**
**மனைவி, பிள்ளைகள்.**

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு....

★ ஆண்களுக்கான றெடிமேட் மொடல் ஜீன்ஸ் வகைகள்
★ சேட்ஸ்,T.சேட்ஸ், சேட்டிங், சூட்டிங் வகைகள்..
★ தொப்பி, பெல்ற், பேஸ் வகைகள்.

**JUKI-5550,HARA-5550,8700,OVERLOCK**
**(KUMAR INDIAN, CHINA)**




அனைத்து மெசின் வகைகள்,
உதிரிப்பாகங்கள், தையல் உபகரணங்கள்,
நூல் வகைகள் அனைத்தையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள........



(சி/566626)

**சிற்றிசன் போய்ஸ் செலக்சன் & ரெய்லரிங்**

இல.01,பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776143301

இல.302,பலாலிவீதி,
ஆலடிச்சந்தி,
திருநெல்வேலி.

## கிளிநொச்சி வலய ஆசிரியர்களின் சம்பளம்

யாழ்ப்பாணம்.ஏப் 9

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள கிளிநொச்சி வலய ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் நாளை சனிக்கிழமையும் மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் லீவு விவரம் மற்றும் இறுதியாக இணைப் புப் பெற்ற கடிதம் என்பவற்றை சமர்ப்பித்து கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

## மரண அறிவித்தல்

### தளையசிங்கம் நவரத்தினராசா

(ஓய்வுபெற்ற செயலாளர், நகரசபை, சாவகச்சேரி)



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, பெருங்குளம், மட்டுவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தளையசிங்கம் நவரத்தினராசா 07.04.2010 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தளையசிங்கம்- சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்றவர்களான நாகமுத்து-பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பூமணி, பீதாம்பரம், சிவயோகம், நவநீதம், கபிலராசா, இரத்தினேஸ்வரி மற்றும் அகத்தியர் (ஓய்வு பெற்ற இராணுவ சார்ஜன்ட், மேஜர்), பவளகேசரி ( வினோ நகைப்பூங்கா), செல்வரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயாநிதி (நூலகர், நகரசபை, சாவகச்சேரி), ஜெயநிதி (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி), கலாநிதி (ஆசிரியை, றம்பைக்குளம் மகாவித்தியாலயம், வவுனியா), விஜயாநிதி (கனடா), நகுலேஸ்வரன் (சுவிஸ்), சுதாநிதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் பாலச்சந்திரன் (ரெலிக்கொம், யாழ்), இலங்கைரத்தினம் (பிரதேச செயலகம், வவுனியா), கெங்காதரன் (கனடா), தயாநிதி (சுவிஸ்), சுகந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுமல்யா சுஜீபா, கௌசல்யா விமலன், சோபிகா சுதர்சன், நிசாந்தன் சுரேகா, தபோதரன், கரீசன், பிரபூசன், ஆரபி, கீர்த்தனா, நர்த்தனா, அக்ஷரா, விபுஜான் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆகாஷ், திலக், யோனா, றஜித் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருங்குளம் மட்டுவில் வீதி,
சாவகச்சேரி. (சி/566162)

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### குணரட்ணம் ஜெயசிங்கம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர், யாழ்ப்பாணக் கல்லூரி)



வட்டு.தென்மேற்கு, வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் ஜெயசிங்கம் 03.04. 2010 அன்று லண்டனில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரட்ணம்- குட்டிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்ற ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், சரஸ்வதி- செல்வரட்ணம் மற்றும் மகிழ்தேவி- பரமலிங்கம் (கனடா), காலஞ்சென்ற தர்மராஜா, காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் ராஜமோகன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணசேகரம் (லண்டன்), குணதயாளன் (கனடா), குணசீலன் (UK.), குணசங்கர் (அவுஸ்திரேலியா), குணரட்ணம் (கனடா), Dr.குணதிலகன் (UK.) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவாஜினி (UK.), Dr.உதயதாரணி (கனடா), கீதா (UK.), கௌரி (அவுஸ்திரேலியா), மாதவி (கனடா), Dr.சுதாஹரி(UK.) ஆகியோரின் அன்பு மாமனாரும், அர்ச்சனா, துசீலன், தீபிகா, சஞ்சனா, அஸ்வின், பிருந்தா, கவின், கோதை, காவேரி, ஆர்த்தி, லக்ஷனா, நந்தனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (11.04.2010) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
J.Gunathilagan,
16, Deal Drive,
Still Water Park,
Herne Bay,
CT 6 5RA,UK.

சகோதரர்கள், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
செ.குகநேசன்
நாக்கம் தோட்டம்,
வட்டுக்கோட்டை.

## உடன் விற்பனைக்கு

புதிதாக கொள்முதல் செய்யப்பட்ட, லான் மாஸ்டர் பெட்டியுடன் மற்றும் விவசாயத்துக்கு பயன்படுத்தும் உபகரணங்களும், கணிசமான விலைக் கழிவுடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0775201697,**
**0773707539**

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல புடைவைக் கடைக்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் இருப்பவர்களுக்கும், அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**55, பெரியகடை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
தொ.பே:0777031382, 0212223145

## சைவப்புலவர் சங்க கூட்டம் நாளை


அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் முற்பகல் 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்திற்கு சங்கத்தின் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் சைவப் புலவர் கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார். (ஒ-

## மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

# கலாலயா

பயிற்சியகம்



பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

**விடுமுறைக் கால 10 நாள் வகுப்புக்கள்**

- கூந்தல் அலங்காரம் : 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் பண்ணுதல், முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், முடி வெட்டுதல்.
- Facials மற்றும் மணப்பெண்கள் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.)

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 12-04-2010 காலை 9.00 மணி**

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்.நகருக்கு சுமார் 4Km தூரத்திலும் நல்லூர் கோயிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3 ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் தாய்மையான குடிதண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய 4 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் இரண்டாகப் பிரித்துக்கொடுக்கப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்.

தொ.பே.: 0772469015, 0725682849, 0786711952

**O/L பெறுபேற்றின் இணையப்பிரதி Free**
**கணனிக்கற்கைநெறிக்கான Scholarship**




உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு Closing Date 16.04.2010

MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : Http://www.mcsitcampus.org Call 772395895


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை பஞ்சலிங்கம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - கொக்குவில்)



தாவடி தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை பஞ்சலிங்கம் நேற்று (08.04.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை - வாலாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும், திருநாவுக்கரசு - செல்லாட்சி தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவசோதியின் பாசமிகு கணவரும், துஷ்யந்தி, ஸ்ரீராம் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பரமானந்தம், நடேசபிள்ளை மற்றும் தெய்வேந்திரம், கணேசபிள்ளை, அருந்தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில். (96728)

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னப்பு பெனடிக்ற் மகாலிங்கம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச., சாரதி)



ஆனைக்கோட்டை, குருசு மதவடியைச் சேர்ந்த சின்னப்பு பெனடிக்ற் மகாலிங்கம் (ஓய்வுபெற்ற இ.போ.ச., சாரதி) நேற்று (08.04.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-அன்னம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான எட்வின் பேராரா-லூர்த்தம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற எமலினின் அன்புக் கணவரும், டொலறோசா, டொறின் ஜெசிந்த (பிரான்ஸ்), ஜெராட் (பிரான்ஸ்), சுதர்சன் (பிரான்ஸ்), டொறின்யேற்றூட் (பிரான்ஸ்), விக்ரோறியா (ஆசிரியை, வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம், ஆறுகால்மடம்), ஜெயசீலி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராசா, அன்ரணி, பிரேமினி, வினிஸ்டலா, உதயகுமார், எல்விஸ்பிறஸ்லி, கிளேட்டஸ் ஆகியோரின் மாமனாரும், ஜெயறீகன், செறின்ஜடா, டயானா, பெதறிக்கன், றொலிங்சன், ஜெவின், ஜெனூசியா, ஜெறோமி, கெவின், எமில்ரன், கரோலின், திவ்வியா, டயான், டொறியோன், ஜெறோம், ரிறோன், டியோலின், நிக்ஷலா ஆகியோரின் பேரனும், றியறோசின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருசு மதவடி,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
விக்ரோறியா
(மகள்)

### யாழ். வேம்படி....

(2 அம் பக்கத் தொடர்ச்சி)

விதுர்ஷனா மோகன்ராஜ், ஜனுதி உதயகுமார், கீர்த்தனா கந்தசாமி, நாராயணி சபாரட்ணம், பௌசிகா ருத்ரகுமார், சுஜீவா செந்தில்குமரன், தட்ஷாயினி யோகராஜா.

7 'ஏ' சித்தி பெற்றோர்.

ஆங்கில மொழிமூலம் - ஜெனோஷா இக்னேசியஸ் (7 ஏபிசி), மயூரி புஸ்ப நாதன் (7 ஏபிசி), நிரோஷிகா ராஜேந்திரன் (7 ஏபிசி), சாருகா பரமேஸ்வரன் (7 ஏ 2 சி).

தமிழ் மொழிமூலம் - நிஜானி குமரேசமூர்த்தி, சாருண்யா ஞானசுப்பிரமணியம், தர்சிகா தர்மபாலன், பாலினி பாலச்சந்திரன், கீர்த்தனா ரவீந்திரநாதன், காவேரி கிருஷ்ணகுமார், லெமேரிகா ராஜேஸ்வரன், சிவநிரோஜினி சிவேந்திரகலாநிதி, திவ்யபாரதி மோகனசுந்தரம், லக்ஷியா ராசநாயகம், நர்மதா முருகநாதன், நிஷாந்தி மகேந்திரலிங்கம், நிவேதிகா செல்வரத்தினம், சகானா ருக்மினிகாந்தன், சோபிதா சந்திரவடிவேல், அபிலாஷினி கோகுலதாசன், சஞ்சீவா அருணாசலம், சுஜீவா சோமசுந்தரம், நிரூசா நாகரட்ணம், ஸ்ரீபரா சற்குணலிங்கம். (ஒ-6-16)

### அரியாலையில் ஞாயிறன்று கலாசாரப் பெருவிழா

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் கலாசாரப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அரங்கத்தில் நடைபெறவுள்ளது. எஸ். சி.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கவியரங்கம், கும்மி நடனம், பட்டிமன்றம் மற்றும் கோலாட்டம், வில்லுப்பாட்டு ஆகிய கலை நிகழ்வுகள் இடபெறவுள்ளன. (ஒ-9)

## கைமாறிவிட்டது

கடந்த 05.04.2010 திங்கட்கிழமை தெல்லிப்பழை நோக்கிச் செல்லும் தனியார் பஸ்சில் கறுப்பு நிற பயணப்பை ஒன்று கைமாறிவிட்டது. இதனைக் கைமாறி எடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு உரியவரின் பயணப்பையைப் பெற்றுக் கொள் ளவும். 0779649696

### வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஏப்.9

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 814ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "C" என்ற ஆங்கில எழுத்தும் 15/24/34/68 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 30 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களும் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 3 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 210 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 10,062 பேருக்கு நான்காம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,41,379 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)


## யாழ். - கொழும்பு சொகுசு பஸ்

900/= மட்டும்

D.S.GUNASEKARA Bus
ஆசனப் பதிவு செய்யுமிடம்:
ராஜா பென்சி,
153, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 0777974103


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 ★ 08 ★ 1981



இறப்பு 09 ★ 04 ★ 2005

### அமரர் ஞானசேகரம் ஜயந்தன்

எங்கள் குடும்பத்தில் முதல் வந்த முத்தே!
ஆண்டுகள் உருண்டோடிப் போனாலும்
உந்தன் நினைவுகள் எம் உயிருடன்
உயிர் வாழ்கின்றன.

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர். (96432)

தந்தை, தாய்,
தங்கைமார்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 ★ 11 ★ 1947



மறைவு 09 ★ 04 ★ 2009

### திருமதி ரேவதி சுவாமிநாதன்

அன்பின் அன்னையே!
எம்மைவிட்டு அகன்று
ஓர் ஆண்டு ஆகியும்
ஆறவில்லை எம்துயர்
உங்கள் இனிய நினைவுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.



88, கோயில் வீதி,
நல்லூர். (96725)

பிரார்த்திப்போர்:
கிரிசாந்தன், பிரகலாதன்,
(மகன்மார்)





veta ஆசியாவில் 140 நகரங்களில் 250 கிளைகள் மூலம் ஆங்கிலத்தை பயிற்றுவிப்பதில் வல்லுநர்கள், 25 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் பேச்சுத் திறமைக்கு ஒளி விளக்காக விளங்கியவர்கள்.

உயர் கல்விகற்போர், பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்லவுள்ளோர்


நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.

veta®
Experts in English Training
An ISO 9001:2000 Company

யாழ் நகரில் பிரிவுகள் ஆரம்பம் பதிவுகளை மேற்கொள்ளுங்கள் மேலதிக விபரங்களுக்கு.

DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்பாணம். Tel. : 021-222 4403


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது குடும்பத்தவர் சகிதம் வீரகெட்டிய மெதமுல்லான மகாவித்தியாலயத்திற்கு வாக்களிக்க வருகின்றமையை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் வாக்களிக்கச் செல்கின்றமையையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரிக்கு வாக்களிக்கச் செல்கின்றமையைப் படங்களில் காணலாம்.

# நாவலப்பிட்டித் தொகுதியில் வாக்கு எண்ணும் பணி ரத்து

கொழும்பு, ஏப்.09

கண்டி மாவட்டம் நாவலப்பிட்டியில் இடம்பெற்ற உச்சக்கட்ட வன்முறைச் சம்பவங்களால் வாக்கு எண்ணும் பணிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாவலப்பிட்டியில் 47 வாக்குச்சாவடிகளில் எதிர்க்கட்சி பிரதிநிதிகள் விரட்டப்பட்டு, சில வாக்குச்சாவடிகளில் பலவந்தமாக வாக்களிக்கப்பட்டமை குறித்து கவனம் செலுத்தி அந்த வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்கெடுப்பை ரத்துச் செய்ய வேண்டும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிடம் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கண்காணிப்பு வலையமைப்பின் நிறைவேற்று அதிகாரி கலாநிதி உதித குணசேகரவின் கையெழுத்தில் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடித்தத்திலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே உள்ளிட்ட சிலர் நாவலப்பிட்டியில் உள்ள 46 இலக்க வாக்குச்சாவடிகளுக்குள் பலவந்தமாக பிரவேசித்து, பெருமளவிலான வாக்குச்சீட்டுகளில் புள்ளடியிட்டு, வாக்குப் பெட்டிகளில் பலவந்தமாக இட்டுள்ளனர்.

அமைச்சர் அலுத்கமகேவுடன் 5 பொலிஸாரும் 50 இற்கு மேற்பட்டவர்களும் சுமார் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேலாக வாக்குச்சாவடியில் இருந்தனர் எனவும் அந்த கடிதம் மூலம் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

நாவலப்பிட்டியில் 10 வாக்குச்சாவடிகளில் வழங்கப்பட்டிருந்த வாக்குச்சீட்டுகளில் வெற்றிலைக்கு வாக்களிக்கப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி தொகுதியில் வரக்காவ கலவன் பாடசாலை, கதிரேஷன் மத்திய கல்லூரி, அனுருத்த குமார கல்லூரி போன்ற வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாக்குச்சீட்டுகளில் வெற்றிலைக்கு வாக்களிக்கப்பட்டிருந்தது எனத் தேர்தல் வன்முறை கண்காணிப்புக்கான நிலையத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

இதையடுத்தே அங்கு வாக்கு எண்ணும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தமிழ்மக்கள் தங்கள் இருப்பை நிலைநிறுத்த வேண்டிய தருணத்தில் குடாநாட்டு மக்களின் நிலைப்பாடு மிகவும் ஏமாற்றம் அளிப்பதாக ஏனைய தமிழ் மாவட்டங்களின் புத்திஜீவிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

புலம்பெயர்ந்த தமிழர்களும் யாழ். மக்களின் இந்தத் 'தடுமாற்றம்' குறித்துப் பெரும் விரத்தியும் கவலையும் வெளி யிட்டிருக்கின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல் கள் தெரிவிக்கின் றன.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் தாக்கம் - பாதிப்பு போன்றவற்றின் எதிரொலிப்பாக இத் தகையநிலைமக்கு கார ணமாக இருக்கக் கூடும் என் றும் கரு தப்படுகின்றது.

## 55 சத வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சிகள் மத்தியில் காணப்பட்டது.

எனினும் மதியத்துக்குப் பின்னர் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டது. எனினும் ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவான அளவு மக்களே வாக்களித்துள்ளனர் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் 62 வீதமான மக்கள் வாக்களித்திருந்தனர். (அ-சி)

## யாழ். தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து ஹெலி மூலமும், ஏனைய இடங்களில் இருந்து பஸ்கள் மூலமும் வாக்குப் பெட்டிகள் எடுத்துவரப்பட்டு வாக்கு எண்ணும் பணிகள் நேற்று மாலை ஆரம்பமாகின.

இதேவேளை, -

வன்னியில் 33 சத வீதமும், மட்டக்களப்பில் 51 சத வீதமும், அம்பாறையில் 60 சத வீதமும், திருகோணமலையில் 65 சத வீதமும் வாக்குகள் பதிவாகியிருந்தன. (ஒ-1)

## வட்டுக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

| தொகுதி | மொ.வாக்காளர் | பதிவான வாக்குகள் |
|---|---|---|
| ஊர்காவற்றுறை | 53,111 | 9,428 |
| வட்டுக்கோட்டை | 63,991 | 16,605 |
| காங்கேசன்துறை | 69,082 | 11,421 |
| மானிப்பாய் | 71,114 | 15,386 |
| கோப்பாய் | 65,798 | 12,600 |
| உடுப்பிட்டி | 56,426 | 10,937 |
| பருத்தித்துறை | 48,613 | 8,051 |
| சாவகச்சேரி | 65,141 | 14,289 |
| நல்லூர் | 72,558 | 13,055 |
| யாழ்ப்பாணம் | 64,714 | 9,006 |
| கிளிநொச்சி | 88,474 | 9,816 |

## ஆளுங்கட்சிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் இதனை உறுதி செய்கின்றன.

வாக்களிப்பின் போது இடம்பெற்ற வன் செயல்கள் குறைவடைந்து அமைதியாக வாக்கு எண்ணும் பணிகள் செயலகங்களில் நள்ளிரவைத் தாண்டி யும் இடம் பெற்றுக்கொண்டிருந்தன.

ஆளும் கட்சி ஆட்சி அமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மையை பெறும் என்றும் - எனினும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நள்ளிரவு வெளியான இரத்தினபுரி, மாத்தறை ஆகிய மாவட்டங்களின் தபால் மூல வாக்களிப்பில் ஆளும் கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருந்தது.

பெரும்பாலான தொகுதிகளில் ஆளும் கட்சி முன்னணியில் இருப்பதாக பிந்திய தகவல்கள் தெரிவித்தன. (ஒ-1)

## யாழ். , வன்னி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நள்ளிரவு வரை கிடைத்த தகவல்களின் பிரகாரம் தமிழரசுக் கட்சிக்கு யாழ். தேர்தல் தொகுதியில் 5 ஆசனங்களும், வன்னித் தேர்தல் தொகுதியில் 3 ஆசனங்களும், மட்டக்களப்பில் 3 ஆசனங்களும், திருகோணமலையில் 2 ஆசனங்களும், அம்பாறையில் ஒரு ஆசனமும் கிடைக்கும் என்று (உத்தியோகப் பற்றற்ற ரீதியில்) எதிர்வு கூறப்பட்டது.

இச்செய்தி எழுதப்படும் வேளை தபால் மூல வாக்குகளே எண்ணப்பட்டதால், உத்தியோகபூர்வ முடிவுகள் இன்று காலையிலேயே வெளியிடப்படும் சாத்தியம் உண்டு என்று எமது செய்தியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (அ-1)


**Spoken English & Grammar**

(தபால் மூலம் அல்லது வீடுகளுக்கு வந்து)

By.Mr.B.Ruban (A/L English Teacher & BBA) SMS Your address for Course Details.

T.P: 0779785749, 0718561532

SUBRA (14)
சித்தன்கேணி
PHYSICS-2012 A/L
பொறியியல்
ஆரம்பம்: 11.04.2010 (ஞாயிறு)
Sat, Sun: 6-7 (p.m)
By: SCIENCE CORNER
வழமையான ஆசிரியர்

யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர் குழுவுடன்
வர்த்தகப் பிரிவு
A/L 2012
கலைப் பிரிவு
ஆரம்பம்: 10.04.2010 சனி காலை 8 மணி

J/NEC
CLOCK TOWER Road, JAFFNA.
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)

உப அஞ்சல் அதிபர் பரீட்சைக்கானவகுப்பு
ஆரம்பம்: இன்று (வெள்ளி) 2.30 மணி,
வெள்ளி, சனி, ஞாயிறு 2.30-5.00
ஏனைய நேரம் வகுப்பில் தீர்மானிக்கப்படும்.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலைக்கு...)

35ஆவது வருட சேவை
**விக்னா**
கல்வி நிறுவனம்,
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

பிரிவு: 2
O/L DAY CLASS
ஆரம்பம்: 16.04.2010 (fri 8.30-2.00)
இம்முறையும் பிரிவு 6 மட்டுமே
* பிரிவு 3 மிகவிரைவில்
* விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்
* இன்றுமுதல் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**Computer Engineer**
அரச புலமைப்பரிசில்
விண்ணப்பிக்க விரும்புவோர் 16-04-2010 இற்கு முன்னர் நேரில் தொடர்புகொள்ளவும்
MCS Supported By ...
324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம், Bus Root - 764

**விற்பனைக்கு**
49 CC Hero Stream மோட்டார் சைக்கிள் ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0773618586.

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
பௌதீகவியல்
2012 A/L
பொறியியல்
ஆரம்பம்: 10.04.2010 (சனி)
Sat, Sun: 6.30-7.30 (a.m)
By: வழமையான ஆசிரியர்

**வேலையாள் தேவை**
நெல்லியடி பிரதான வீதியில் அமைந்துள்ள பிரபல உணவகத்திற்கு சமையல்காரர், உணவு பரிமாறுபவர் (சப்ளே) கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.
தொடர்புகளுக்கு:
T.P:- 0778691967


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நகுலேஸ்வரி நமசிவாயம்

விழிசிட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாவும், இல.114, மானிப்பாய் - யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாயைத் (தாமஸ் லேன் எதிரில்) தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி நமசிவாயம் இன்று அதிகாலை (09.04.2010) வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2010) பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.114, மானிப்பாய் - யாழ்ப்பாணம் வீதி,
மானிப்பாய்.
(தாமஸ் லேன் எதிரில்)

தகவல்:
ம. முரளிதரன்
(பேரன்)

### திருமதி தம்பிப்பிள்ளை பார்வதி

மாரிஅம்மன் வீதி, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை பார்வதி இன்று (09.04.2010) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரி அம்மன் வீதி,
கோப்பாய் மத்தி.

தகவல்:
த.ஜெயராசா (மகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org